உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச - ஆனி - 10—7—73 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## மனிதன் உயர்ந்தவனா?

வாழப் பிறந்தவன் மனிதன். 'வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் வானுறையும் தெய்வமாகக் கருதப்பெறுகிறான்' என்கின்றது வள்ளுவம். ஆனால், வாழ்வாங்கு வாழ்வது எப்படி? என்பதிலேயே பல பிரச்சனைகள் எழுகின்றன. அப்பிரச்சனைகளே சமயங்கள்.

### சமயங்கள் யாவை?

ஒவ்வொரு மக்களுக்கும் உள்ள கருத்து வேற்றுமைகளே சமயங்கள். கருத்து வேற்றுமை சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாததுதான். ஆனால் வேற்றுமை ஒற்றுமைக்கு விதையாய

ஆராய்ச்சியாகவும், அதன் முடிவாகிய பயனாகவும் அமைந்து சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்குத் தீங்கு நேராமல் தொன்று தொட்டு அவற்றைப் பாதுகாத்து வருவனவே கொள்கைகள் அல்லது சமயங்கள்.

சமயங்களில் கடவுட்கொள்கையென்ற ஆதார சுருதியுண்டு. சம்பிரதாயங்கள் அல்லது மரபு வழிச்சடங்குகள் என்ற ஜன்ய சுருதிகள் பலவுண்டு. பொதுமக்களின் மனத்தை மலர்த்தி இன்புறச்செய்வன ஜன்ய சுருதிகளான ஏற்றம் இறக்கங்களோடு கூடிய இசைகளே, அதாவது இராகங்களே. பாடுகின்ற மனிதனுக்கு மனிதன் வேறுவேறாக உண்டாகின்ற மனோபாவக் கற்பனைகளே அவரவர் அனுபவங்கள். அதுபோலச் சமயங்களிலும் மக்களுடைய மனப்பக்குவத்திற்கு ஏற்ப - வேண்டுதல் வேண்டாமைக்கு ஏற்ப உண்டாகின்ற கொள்கை வேறுபாடுகளாக சைவம்; சாக்தம், மாயாவாதம், பௌத்தம், ஜைனம், முதலான பல சமயக் கொள்கைகள் அமைகின்றன. சுருங்கச் சொன்னால் மக்கள் மனநிலைக்கேற்பவே சமயக் கொள்கைகள் அமைகின்றன. அப்படி ஆனால் மதங்கள் மனிதன் படைப்புத் தானே! யார் சொன்னது? மக்களில் சிலர் கட்டிளங்காளையாக இருக்கின்றனர். சிலர் குழந்தைகளாகயிருக்கின்றனர். குழந்தைகள் குழந்தையையும், காளையர் காளையர்களையும், கிழங்கள் கிழங்களையும் விரும்புவதைப் பார்க்கிறோம். இளமை காளை, கிழம் என்ற வயது வேறுபாடுகள் மனிதன் படைப்பா? மனிதனால் ஆக்கப்படுவன ஆயின் எவனாவது கிழமாக விரும்புவானா? அதுபோலத்தான் மதங்கள் மனிதன் படைப்பன்று. மனிதனுடைய மனநிலைக்கு ஏற்ப இறைவன் அமைத்த அமைப்புக்களே.

## சமயம் அவசியமா ?

கொள்கையில்லாத வாழ்வு ஒரு வாழ்வா? குறிக்கோளிலாது கெட்டேன் என்று நம்மை எண்ணித்தானே சொல்கிறார்கள் அப்பர் சுவாமிகள் ஆதலால் கொள்கை அவசியம். கொள்கைதான் சமயம். ஆனால் அக்கொள்கை உலகியல் வாழ்வுக்கு உதவுவதாக ஞான வாழ்வுக்கு இன்றியமையாததாக இருக்கவேண்டும். உலகியலில் கையாளப்பெறுவன கொள்கைகள். அதுவே உயிர்வளர்ச்சிபற்றியதாகக் கடவுள் தொடர்புடையதாயின் சமயம்.

மனிதனுக்கு இருவகை வாழ்வுண்டு. இரண்டும் ஒன்றற்கு ஒன்று இன்றியமையாதன என்பதை வள்ளுவர் 'புறந்தூய்மை

நீரான் அமையும்; அகந்தூய்மைவாய்மையாற் காணப்படும்' என்று நீராடலாகிய புறத்தூய்மையில் வைத்து அகத்தூய்மை யின் அவசியத்தையும் வற்புறுத்தவில்லையா ? அகத்தூய்மை தானே சமயவாழ்வு.

அகம் என்பது என்ன ?

மக்களின் உள்ளுறுப்பாய் – உணர்வின் நிலைக்களனாய் - இன்பத்துன்பங்களை எண்ணுதற்கேற்ற கருவியாய் இருப்பது. அதுதான் மனம்.

அது பேராசை பிடித்தது; ஒருநிலையில் நிற்காதது; தனக் கென்று தனித்த வடிவு இல்லாதது. எதனைச்சென்று பற்று கிறதோ அதன் வடிவே வடிவாக இருப்பது. மாட்டைப்பற்றின் மாடாகவும், வீட்டைப்பற்றின் வீடாகவும், ஒளியைப்பற்றின் ஒளி யாகவும், இருளைப்பற்றின் இருளாகவும் இருப்பது. அதனாலேயே நமது ஆசாரியமூர்த்திகள் ' மனம், சென்று பற்றுந்தன்மையது' என்றார்கள். எந்நேரமும் அலைவதால் ' மனமெனும் தோணி பிரபஞ்சக் கடலிலே 'அசைந்தாடிக் கொண்டுதானே இருக் கிறது' என்றார்கள். பொல்லாத மனக்குரங்கு' என்றார்கள். ஒன்றைப்பற்றி உணர்ந்து நிற்கிறதா பாருங்கள் ?

மனம் உடைமையாலே மக்கள் மனிதர் என்ற பெயரையடை கிறார்கள். ஆதலால் மனம் உயர மனிதன் உயருகிறான்; மனம் தாழ மனிதன்தாழ்கிறான். மனம் உயரவேண்டும். அதனாலேயே உள்ளுவ எல்லாம் உயர்வு உள்ளல் என்றார் வள்ளுவர்

நம் மனத்தின் தனிச்சிறப்பு :—

உடலொடு கூடிய உயிர்கள் அத்தனைக்கும் மனம் உண்டு. ஆனால் இது நல்லது, இது கெட்டது, இது ஆகும் இது ஆகாது என்று பகுத்தறிந்து இன்பமே வேண்டும் துன்பம் வேண்டாம் என்கிற இயல்பு மக்களாகிய நமக்குத்தான் உண்டு. ஏனைய உயிர்கட்கு இல்லை. வழக்கமாகத் தின்றதைத்தின்னும்; உறங்கும்; இனம் பெருக்கும். நாளைக்கு என் செய்வோம்? இன்றைக்கு எப்படி இருக்கிறோம்; இருந்தோம் என்ற அறிவு அவைகட்கு இருப்பதில்லை.

எப்போதாவது சிந்திக்கிறோமன்றோ ? ' நான் ஏன் பிறந் தேன்! என்ன செய்கிறேன்; எங்கே போய்க்கொண்டிருக்கிறேன்! எங்கே போகவேண்டும் என்பதை ஞானனுபவ உலகிற்கு நாலா

யிரம் கல் விலகிச்செல்லுபவர்கள் கூட நான் ஏன் பிறந்தேன்; நான் யார் என்பதைச் சிந்திக்கப் பார்க்கிறோமே.

அத்தகைய ஆய்வு உண்மையாலேயே மனிதன் உயர்ந்தவனாகிறான் மனிதன் நான் உயர்ந்தவன் என்று சிந்திக்கின்ற உரிமையைப் பெற்றிருப்பதாலேயே உயர்ந்தவன் என்பதை யுணராமலே உணர்ந்திருக்கிறான் என்பது தெளிவாகிறதன்றோ!

மாடும் குதிரையும் ஒருவன் ஏவ ஓடுகின்றன; உண்கின்றன; அவற்றைத் தமக்காக ஓடச்செய்யும் அறிவாளி யார்? மனிதன் தானே. ஆகவே ஏவியும், தானே இயங்கியும் தொழிலாற்றுகிற சிறப்பு மனிதனுக்குத்தானே உண்டு. அதனால் மனிதன் சிறந்தவனாகிறான்.

செய்யக்கூடாதவற்றை விலக்கிச் செய்ய வேண்டியதைத் தவறாது செய்து வருவதே மனிதன் பெற்ற சுதந்திரப்பயன். அதனாலேயே மனிதன் மனிதனாகிறான். அப்பர் சுவாமிகள் இனித்த முடைய எடுத்த பொற்பாதமாகிய குஞ்சிதபாதத்தைத் தரிசனம் செய்தார்களாம். அதற்கு வாய்ப்புத்தந்த மனிதப் பிறவி அவசியம் வேண்டப்படுவது என்கிறார். ஆகவே மனிதப் பிறவி உயர்ந்ததல்லவா!

மனிதப்பிறப்பின் உயர்வை எண்ணிப்பார்க்காமலா ஔவைப் பிராட்டி 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்று சொல்லியிருப்பார். ஆகவே இத்தனை ஏதுக்களாலும் எடுத்துக்காட்டாலும் மனிதப் பிறவியே உயர்ந்தது. தேவர்களும் தமது நல்வினைப்போகந் தீர்ந்தபின் கன்ம பூமியாகிய இந்த மாநிலத்தே மானிடராகப் பிறந்து சிவபுண்ணியங்களைச் செய்து சிவஞானிகளாகிச் சிவபோகம் நுகர்கின்றனர் என்று நமது குருநாதராகிய அருணந்திசிவம் கூறுவது உண்மையில் உண்மையன்றோ!

ஆகவே மனிதப்பிறவி எவற்றினும் சிறந்தது; அது பல பிறவிகளில் ஈட்டிய புண்ணியப்பயனால் விளைவது. எடுத்த உடலைச் சாதனமாகக்கொண்டு உயர்வற உயர்ந்த கொள்கையைக் கடைப்பிடித்து உயர்தலே மனிதன் செய்யவேண்டிய கடமை.

"நாம் பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றதன் பயன் என்ன? சிவபெருமானை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்."

# அட்டைப் பட விளக்கம்

சிவஞானச் செந்தமிழ்ப் பண்ணை, தருமையாதீனம். தருமையாதீன அருளாட்சியில் இருபத்தாறரை ஆண்டுகள் எழிலாட்சி நிகழ்த்தி, அருள் அறப்பணிகள் ஆயிரம் இயற்றியவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இருபத்தைந்தாவது ஞான பீடம் ஏறிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள், விண்மீன்களெனத் திகழும் தருமையாதீன அருளாட்சியில் சிறக்கும் இருபத்தேழு திருக்கோயில்களையும் அருள்மணம் கமழவும், கலைமணம் திகழவும் புதுப்பித்துக் குடமுழுக்காட்டுவித்து குன்றாப் புகழ் கொண்டார்கள்.

அருளாளர்கள் வாழ்வில் நிகழும் அற்புதங்கள் அவர்கள் திருவருள் உறைப்புக்குச் சான்றாக விளங்குவன. தெய்வீக நெறி வளர்த்த மூவர் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் பலவற்றையும், இமயப்பெருந்தலங்களையும் தரிசித்து மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் சைவர்கட்குக் கண்ணென விளங்கும் கயிலாயம் காணத் திருவுளங்கொண்டு தல யாத்திரை தொடங்கி அளப்பரிய இடர்களை இறையருளால் கடந்து, 'மானுடர்கள் காண்டற்கரியது' என்ற கயிலை மாமலையை 1959 இல் கண்டு வணங்கினார்கள்.

கயிலைக் காட்சியில் திருவருள் வாய்ப்பாக நிகழ்ந்த அற்புதம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. திட்டமிட்டுச் செல்லவில்லை என்றாலும் சைவ - சமய நால்வர் பெருமக்களுள் இரண்டாமவராகிய ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் கயிலைக் காட்சியை ஐயாற்றில் கண்டு, சராசரங்களெல்லாம் அம்மையப்பராக விளங்கும் அற்புதம் நினைந்து தொழுத அதே ஆடி அமாவாசை நாளில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் கயிலாயநாதன் கழலடி தொழுதார்கள் என்பதை வியவாதிருத்தல் இயலாது.

கயிலாய பரம்பரை என்ற தொடர்பை-கயிலாயம் தரிசித்துச் சிறப்பித்த - அதுவும் அப்பர் பெருமான் கண்ட அதே நாளில் காணப்பெற்ற சிறப்பை எண்ணி - சிந்தை மகிழ்ந்த அன்பர்கள் எல்லாம் 'கயிலைக் குருமணி' என்றே அவர்களைக் கனிவோடு அழைத்தார்கள்.

ஆண்டுதோறும் கயிலை கண்டருளிய ஆடி அமாவாசை நாளில், திருக்கயிலாயத் திருவுருவப் படத்தைக் 'கயிலை மலையனைய' வெள்ளி ரதத்தில் எழுந்தருள்வித்து, உடன் இருந்து

விதியுலாச்செய்வித்து - அன்பர்களுக்கு அருள் நலம் கூட்டியருளிய கருணையைக் கயிலைக் குருமணி அவர்கள் கனிவோடு நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் வழித்தோன்றலாய் தருமையாதீன அருளரசோச்சும் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவ்வாண்டும் அதே ஆடி அமாவாசைத் திருநாளாகிய 29-7-73 ஞாயிற்றுக்கிழமை, திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவிதியுலாவைத் திருமுறைப் பாராயணத்தோடு சிறப்பாக நிகழ்த்தத் திருவருள்பாலித்திருக்கிறார்கள். இவ்வினிய திருநாளில் கலந்து கொண்டு, வழிபடுவது கயிலாயநாதன் தண்ணருள் விளைக்கும் என உணர்ந்து நாம் அனைவரும் வழிபட்டு உய்வோமாக

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் கயிலாயமலையின் தென்முகக் காட்சியைத் தரிசித்து மகிழ்ந்த காட்சி, கயிலாய நினைவு நாளை ஒட்டி இவ்விதழ் அட்டையில் வெளியிடுவதில் பெருமகிழ்வெய்துகிறோம்.

## மூன்று உண்மைகள்!

மழையைப் பெய்ய வொட்டாமல் தடுக்கும் கிரகங்கள் உலகத்தில் - ஆம் - நாம் வாழும் மண்ணுலகத்திலும் சில உண்டு. கொள்ளுகின்ற வரிப் பொருளுக்காகக் குடிமக்களை வருத்துகின்ற அரசன் ஒருவன்; உள்ள உண்மையைக் கூறாமல் பொய்ச்சான்று பேசுபவன் ஒருவன்; வீட்டிலிருந்து கொண்டு முறை கடந்து நடக்கும் பெண் ஒருத்தி, இம்மூவர் நாட்டில் இருந்தாலே மழை பொழியாது,

— நல்லாதனார். — "வேலன்"

# சுவர்க்க நரக இயல் — — புண்ணியப் பயன்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

கேளாய்! அகத்திய மாமுனிவனே! மேலே பாதகம் அதிபாதகம் மகாபாதகம் அவைகளைப் போன்ற - அவைகளோடு ஓரளவு ஒத்த பாதகங்களின் வகைகளை நாம் சொல்லச் சிரத்தையுடன் கேட்டனை. இனி அவைகளால் அடையும் பயனையும் - புண்ணியப் பயனையும் வகுத்துரைப்போம்; கேட்பாயாக என முருகப்பெருமான் கூறத் தொடங்குகிறார்.

பாதக வகைகளைச் செய்த பேர்கள் உடலை நீத்தபின் யமலோகத்தையடைவார்கள். அங்கு யமதருமன் அவர்களைக் கண்களால் விழித்துநோக்குவான். அவர்கள் நெஞ்சு படபடக்க அஞ்சி மயங்குவர். இவர்களைப் பிடித்துக்கொண்டு போம்போதே யமதூதர்கள் அடித்து எடுத்து எறிவர். இவர்கள் தலைகீழாக நரகில் குப்புற விழ்வார்கள். அவர்கள் வருந்தும் வகைகளோ பலகோடி: அவற்றைப்பற்றிப் பின்பு விளக்குவேன்.

முதலில் புண்ணியஞ்செய்த பேர்களை யமதருமன் அழைத்துக் கொண்டுபோம் மரியாதைகளையும், அவன் செய்யும் (சற்காரம்) உபசாரங்களையும், சுவர்க்கத்தில் அவர்கள் நுகரும் இன்பவகைகளையும் விளக்குவேன் என்று கூறத் தொடங்குகிறார்.

மாதாவின் வயிற்றுப் பதிந்த கருப்பமும், அது முற்றிய பிண்டமும், அது முற்றிய குழவி வடிவான பிண்டமும், அது முற்றிய பால - குமர - தருண - விருத்தவடிவமான யாக்கையும் நிலையில்லாதன. எக்கணத்தில் நீங்கும் என்பதை அறிவார் யாரும் இல்லை. உடல் எடுத்த உயிர் ஊழ்வினைகளை நுகர்ந்தபின் யமதூதர்கள் வந்து துன்புறுத்தி ஊன் உயிர் வேறு செய்வர். அப்போது இந்த ஆன்மா இந்தப் பூத உடலைவிட்டு

[ குறிப்பு:- சுவர்க்க நரக இயல் கவி. 1 முதல் 42 முடிய. ]

யாதனா சரீரத்தைப் பெற்றுப் புண்ணிய பாவப் பயனை நுகர யமலோகம் சென்றடையும். ஆதலால் எந்த - எந்தப் புண்ணியம் செய்தோர் எவ்வெவ்வகையான லோகத்தையடைந்து எவ்வெவ் வகையான இன்பத்தை அடைவார்கள் என்பதை விவரிக்கின் றோம்.

சிவஞானியர்க்கும் - தவமுனிவர்க்கும் - அந்தணர்க்கும் செருப்பு - மரவடி (பாதுகை) இவைகளைக் கொடுத்தோரிறப்பின் யமலோகம் செல்லும் வழியிலே குதிரை வர அதன்மேல் ஏறி அனைவரும் பாராட்டப் போவர்.

குடை தானம் பண்ணினவர்கள் மேகமண்டலம் நிழல் செய்ய மகிழ்ச்சியுடன் எமபுரம் செல்வர்.

பட்டு முதலிய ஆடைகளைத் தானம் பண்ணினவர்கள் அனை வரும் சிட்டர்கள் இவரே என்று பாராட்ட, பார்ப்பனர் பாராட்ட, அழகிய ஆடையணிகளுடன் செல்வர்.

மெத்தை தானம் செய்தோர் பூமியில் எல்லா இன்பங்களையும் நுகர்ந்து சிவிகை வர அதன்கண் ஏறி யமபுரம் சேர்வர்.

குதிரைகளைத் தானம் செய்தோர் அங்ஙனமாய குதிரை மீதேறி, எத்துணையின்பங்கள் உள்ளனவோ அத்தனையும் பெற்று, இவர்களே சித்திபெற்ற பெரியோர் என்று உலகம் போற்றச் செல்வர்.

கட்டில் தானம் செய்தோர் வேண்டியன அனைத்தும் பெற்றும் இவர்களே சிட்டர் சித்தர் என்றனைவரும் போற்றச் செல்வர்.

மக்கள் நலனுக்காகச் சாலைகளும் சோலைகளும் அமைத்த வர்கள் ஒப்பற்ற புகழ் உடையவர்களாகச் செல்கின்ற வழிதோறும் மரங்கள் மலர்மழைபொழிய, எல்லா இன்பங்களையும் துய்த்துச் செல்வர்.

இறைவனுக்காகத் திருநந்தவனம் அமைத்த பேர்கள் பொழில்கள் தேன் சிந்த இன்பமுடன் யமபுரத்தை அடைவர்.

தேவர்கள் முதலியோர்க்குப் பணிவிடை செய்தோர்கள் சித்திரத்தில் எழுதிய பாவை போன்ற பெண்கள் புடைசூழ, வழி எங்கும் மகிழ்வுடன் எமபுரம் அடைவர்.

தேவ சந்நிதிகளில் தீபம் தூபம் இட்டபேர்கள் பெரிய ஞானவான்கள் என்றும் சிவனருளுக்கு உரியவர்கள் என்றும் பலர் பாராட்ட தன்மராசனை யடைவர்.

முன்னர் அறியாத பேர்களாகிய அதிதிகளுக்கு வீடு முதலியன கொடுத்து உதவினோர்கள் எல்லையற்ற வளமுடன் மன்மதனைப்போல யமஉலகம் அடைவார்கள்.

கோதானம் பண்ணினவர்கள் மறையவர்கள் மலர் மழை பொழியத் தேரேறி தேவர்களைப் போலச் செல்வர்.

அன்னதானம் செய்தோர் வழிநெடுக உணவு மிகக் கிடைத்தும் உண்ணாத்தெரியாதவர்கள் இவர்கள் என்று அனைவரும் புகழ நடுவனை யடைவார்கள்.

நோயாளர்க்கு மருந்துகள் உதவினோர் அழகான வடிவம் பெற்று மன்மதன் எனச் சமன் உலகடைவர்.

வித்யாகுரு - ஞானகுரு இவர்கட்குப் பணிவிடை செய்தவர்கள் எதிரே தெய்விகத்தேர் எதிர் கொண்டழைக்கவர - அழகான மகளிர் புடைசூழ யமனுலகடைவர்.

அந்தணர்கள் சிவமுனிவர்கள் பாதங்களை வணங்கினவர்கள் கற்பக விருட்சத்தின் நிழல் வழியாக ஒப்பில்லாதவர் என உலகம் போற்றச் செல்வர்.

அந்தணர்கட்குப் பொன் மணி முதலியன கொடுத்தோர் மேருமலை வழியாக - இவர் பேரருளாளர் என உலகம் போற்றச் செல்வர்.

பெரியோர்கள் பாதங்களை வருடினவர்கள் குதிரைமேலழகாக மன்மதனைப் போல யமலோகம் அடைவார்கள்.

அந்தணர்க்குத்தேர் தானம் செய்தோர் பூந்தோர் எதிர் கொள்ள மகளிர் புடைசூழ மகிழ்வுடன் செல்வர்.

பூமிதானம் புரிந்தோர் இனிய வழியில் தன் காதலியுடன் களிப்பாக யமபுரம் செல்வர்.

அந்தணரல்லாத அனைவருக்கும் அன்னம் சொர்ணம் தேர் குதிரை முதலியன வழங்கியவர்கள் அவைகள் அனைத்தும் வழியில் இவர்களை வந்தடைய அவற்றை வெறுத்து மகிழ்வுடன் செல்வர்.

இவையொழிந்த ஏனைய தானங்களைப் பண்ணினவர்கள் துன்பமற்று இன்பமாக 'இவர்கள் நல்ல தவமுடையோர்' என உலகம் போற்றச் செல்வர்.

முற்கூறிய தானங்கள் அனைத்திலும் அன்னதானமே சிறந்தது. மிக்க பயனையளிப்பது. கொடுத்த அன்னத்தையுண்டவனுக்கு உடனே பசித்துன்பம் போம். வன்மையுண்டாகும். இன்பம் பெருகும். ஆதலால் இதனை ஒத்த தானம் உலகத்தில் எதுவும் இல்லை.

அன்னத்தால் உடலில் குருதியுண்டாகிறது. அதனாலே தசைநார்கள் உண்டாகின்றன. அதனாலே சுக்கில சுரோணிதங்கள் நிலைபெறும். அதனாலே கருப்பந்தரித்து உடல் உண்டாகும். ஆகவே எல்லாவற்றிற்கும் அன்னமே யடிப்படைக் காரணம். அன்னமில்லையாயின் அனைத்தும் அழியும்.

பசித்தவனை அன்னத்தாலன்றிப் பொன்னாலும் மணியாலும் பெண்ணாலும் மற்றவைகளாலும் மகிழ்வூட்ட இயலாது. பாலகனாயினும் தருணனாயினும் கிழவனாயினும் அன்னமின்றி வாழ இயலாது. இங்ஙனம் மக்களேயன்றித் தேவர்களும் அன்னத்தையே விரும்புகின்றனர். அதுவே பசிநோய் தணிக்கும் அருமருந்து.

அன்னம் அளிப்பவனாலேயே இரப்போன் உயிர் அவனுடலில் தங்கியிருக்கிறது. இல்லையானால் அவனுடம்பைவிட்டு உயிர் போய்விடும். ஆகவே உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோராவர்.

அன்னமிட்டபேர்கள் இருமையின்பத்தையும் எய்துவர். முனிவர்களுக்கும் தவசிகட்கும் அன்னமிட்டோர் அவர்களுடைய தவப்பயனில் சரிபாதியைப் பெறுவார்கள்.

அன்னதானம் செய்தோர் இவ்வுலகில் அடையவேண்டிய எல்லா இன்பங்களையும் எய்துவர். அன்னமே எல்லாவற்றிற்கும் மூலகாரணம். அதுவே படைத்தலாதி ஐந்தொழிற்கும் அடிப்படை; மூன்று மூர்த்திகட்கும் மூலமானது. அதுபோலவே நீரும் இன்றியமையாதது. ஆகவே இவைகளை வழங்கினோர் இன்பமயமாகி எமனுலகம் எய்துவர்.

இத்தகைய புண்யசீலர்கள் யமலோகம் வந்தால் யமதருமன் அன்புடன் அழைத்துச் சிங்காதனத்திருத்தி உபசரிப்பன். தங்களைப் போல சமுதாயத்திற்கு உதவியவர்கள் யார்? என்று பாராட்டுவான். அமரர் போகத்தையருந்தி இருங்கள் என்று வாழ்த்துவான். பின்பு சுவர்க்கத்திற்கு அனுப்பிவைப்பான்.

புண்ணியசீலர்கள் யமனிடம் விடைபெற்றுப் புஷ்பக விமானத்தில் ஏறிச் சுவர்க்கம் சென்று சுகங்களை நுகர்வர் என்றும் துன்பின்றி வாழ்வார்கள்' என்றும் புண்ணியப் பயனைச் சொல்லி முடித்த முருகப்பெருமான் மேலே பாவப்பயன்களை விளக்குகிருர்.

(தொடரும்.)

# நான் கண்ட தவப்பெண்

திரு. ஆர். வேலாயுத ஓதுவார்

வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் கீழ்க்கொடுங்காலூருக்குத் தெற்கே உள்ளது கொட்டை என்ற கிராமம். இவ்வூரில் விநாயகர், திரௌபதி அம்மன், செல்லியம்மன் கோயில்களும், சிவாலயம் ஒன்றும் உள்ளன. சிவாலயம் பூசையின்றிப் பாழ்பட்டிருக்கிறது. இவ்வூரில் கல்லுடைத்துக் கூலி வேலை செய்யும் ஒரு குடும்பத்தில் கன்னியம்மாள் என்பவர் மகள் லக்ஷ்மி என்ற பெண் அண்மையில் திருமணம் முடித்து வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தாய்வீடு திரும்பியிருந்தார்.

## சிவசிவப் பழக்கம் :

இவர், சிறுகுழந்தை முதல் நீராடி சிவாலயத்திற்குச் சென்று திருவிளக்கு ஏற்றும் நியமம் உடையவராய் இருந்தார். தாயார் எவ்வளவு திட்டியபோதும் அடித்தபோதும் சிவசிவா என்று கன்னத்தில் போட்டுக்கொள்வாள். தனக்குக் கிடைக்கும் கூலியைக் கொண்டு அதில் ஒருசிறு தொகையைத் திருவிளக்கேற்றியும் வேலையில்லாத காலத்தில் தாயாரிடம் காசுகேட்டு நெய் விளக்கேற்றிவரும் பணி செய்துவந்தார். சிவசிவ என்று சொல்லும் பழக்கம் எப்படியோ இவருக்கு இளமைமுதல் வாய்த்திருந்தது.

## நிர்வாணத் துறவு :

இரண்டாண்டுகளுக்குமுன் திருமணம் நடந்தது. வாழ்க்கையில் மகிழ்ச்சியின்றி தாய்வீடு திரும்பியிருந்த இப்பெண் 22—6—73 விடியற்காலை 5 மணிக்கு எழுந்து தனது கைவளை ஆடைகளை வீட்டில் வைத்துவிட்டு வட்டுத்துணியுடன் சென்று நீராடி சிவன்கோயில் சென்று தீபம் ஏற்றிவைத்து வட்டாடையையும் களைந்தெறிந்துவிட்டு சிவலிங்கத்தின் பின்புறம் அமர்ந்து தலைமயிர் முன் இருபுறமும் பார்வையை மறைத்திருக்க சிவலிங்கத் திருமேனியில் ஆவுடையாரைப் பற்றியவாறு அமர்ந்து கண்களை மூடியபடி தவமிருந்துவருகின்றார்.

### மருத்துவச் சோதனை :

அண்மையில் அவரை வந்து கண்டுசென்ற வேலூர் அமெரிக்கன் ஆஸ்பத்திரி டாக்டரும் அவருடலைச் சோதித்து ஒரு கெடுதலுமின்றி உள்ளார் என்று கூறிச்சென்றார் என்றும், அவரை சில நாட்களுக்குமுன் நாலுபேர் கூடி வெளியில் தூக்கிவர முயற்சித்தபோது அது இயலவில்லை என்றும், எப்போதாவது தனது நாக்கை நீட்டுவதும், அப்போது தரப்பெறும் சிறு மஞ்சள்நீர் தவிர வேறு எதனையும் உட்கொள்ளாது அப்படியே சிவன் வடிவைப்பற்றி கண்மூடி ஒன்றிய சிந்தையராகி அமர்ந்துள்ளார் என்றும் கூறுகின்றனர்.

### மந்திரவாதி :

இவர் இவ்வாறு தவமிருந்து வருவதைக்கண்ட ஒரு சிலர் இவருக்கு பேய், பிசாசு பில்லிசூனியம் இவை பற்றியிருக்க வேண்டும் என்று கூறி ஒரு மந்திரவாதியைக் கொண்டு அவற்றைப் போக்க சில கிரியை முறைகளைச் செய்தனர் அது பயன்தரவில்லை. மறுநாள் மந்திரவாதியின் கை செயல்பட முடியாமல் போய்விட்டது.

### மக்கள் வழிபாடு :

பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்வற்புதக் காட்சியை வியப்போடு கண்டு வணங்குகின்றனர். எக்காலத்தும் திருவருள் விளக்கம் இருந்தே வருவதை இந்நிகழ்ச்சி மெய்ப்பிக்கிறது. அன்றுமுதல் இன்றுவரை, அப்படியே அமர்ந்துள்ளார். நாடோறும் இதனைச் செய்தித்தாள் மூலம் அறிந்த மக்கள் பலரும் கூட்டம் கூட்டமாக வந்து கண்டு உண்டியலில் காணிக்கை செலுத்தி தேங்காய் பழம் பலவும் நிவேதனம் புரிந்து சென்ற வண்ணம் இருக்கிறார்கள் அரசாங்கத்தார் பந்தோபஸ்துடன் (போலீஸ்) காவல்புரிந்து வருகின்றனர். மக்கள் பழக்கவழக்கமின்றி பாழுற்றிருந்த அவ்விடம் பந்தல் போடப்பட்டு மின் விளக்குகள் திகழக் காட்சியளிக்கிறது.

### சிந்தனை :

அவரைக் காணும்போது செயல் ஏதுமின்றி உணர்வினை ஓரிடத்திற் செலுத்திக் கண்மூடி சிவன் வடிவினைப்பற்றி நின்றிடும் சிந்தையராய்க் காணப்பெறுகிறார் இவை நான் கண்டதும் கேட்டதும் ஆகும். இவரது நிலையைப் பார்க்கும் நமக்கு திருமூலர் போன்ற பெரியோர்கள் பல்லாண்டுக்காலம் உண்ணாதும் உறங்காதும் இருந்து தவம் இயற்றினர் என்பதில் வியப்பில்லை.

# ஸ்ரீ சனி பகவான்

திரு. என். இராமகிருஷ்ண.

இவ்வாண்டு ஜூலை மாதம் 10 ஆம் தேதி ஸ்ரீ சனி பகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்குச் செல்கின்ருர். அவ் வமயம் திருநள்ளாற்றில் சனிப் பெயர்ச்சி விழா சிறப்பாக நடை பெறும். பல்லாயிரக்கணக்கான மக்கள் நள தீர்த்தத்தில் மூழ்கி எண்ணெய் தீபமிட்டு சனிபகவானை வணங்குவர். திருநள்ளாற் றுக் கோவிலில் சனி பகவான் உட்கோபுரத்தின் வடபகுதியி லுள்ள ஒரு மாடத்தில் வீற்றிருக்கின்ருர். நின்றகோலம். தங்கக் கவசம் அணிந்து காட்சி அளிக்கின்ருர்.

" சனியைப்போல் கொடுப்பவரும் இல்லை; கெடுப்பவரும் இல்லை" என்பது பழமொழி. இவர் மக்களிடம் கருணையும் காட்டு கின்ருர். தேவ புருஷர்களையும் இவர் விட்டதில்லை. சனிபகவான் முப்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனை வலம்வருகின்ருர். அதனல் "முப்பது ஆண்டு வாழ்ந்தவரும் இல்லை. முப்பது ஆண்டு தாழ்ந்தவரும் இல்லை" என்பது மற்ருெரு பழமொழி.

இவருடைய கோபத்திற்கு ஆளாகத் துணிந்தவர் எவரும் கிடையாது. அபிஷேகங்களும், ஆராதனைகளும் செய்து எப்போ தும் இவரை மக்கள் மகிழ்விக்க எண்ணுகின்றனர்.

வடமொழியில் மார்க்கண்டேய புராணம் இவர் வரலாற்றைக் கூறும். சூர்யபகவானுக்கு சம்ஞா என்ற மனைவி மூலம் மனு, யமன், யமுனை முதலியோர் பிறந்தார்கள். சூர்யன் வெப்பம் தாங்காமல் தனது நிழலான சாயா தேவியை, கணவனைவிட்டு நீங்காமல் இருக்கும்படி சம்ஞா ஆணையிட்டாள். சாயாதேவிக் கும் சூரியனுக்கும் பிறந்தவர் சனி பகவான். தனக்குப் பிள்ளை பிறந்ததும் சாயாதேவி, சம்ஞாவின் குழந்தைகளைக் கொடுமை யுடன் நடத்தினள். யமன் கோபம் கொண்டு அவளைத் தாக்க அவள் கால் முரிந்தது. சூரியன் இதுகேட்டு வருத்தமுற்ருன். சாயாதேவி மன்னிப்புக் கேட்டாள். பின்பு தவம் செய்யும் சம்ஞா வையும் கொண்டுவந்து இல்லறம் நடத்தினள்.

சனிபகவானைக் கோள்களுள் ஒன்ருக இருந்து மக்களுடைய புண்ய பாவங்களுக்குத் தக்கபடி இன்பத் துன்பங்களைக் கொடுக்

கும்படி சூரியன் ஏவினன். சனி பகவான் காசி சென்று விசுவ நாதரைக் குறித்துத் தவம் செய்து வலிமை பெற்றான்.

சனிபகவானுக்கு மந்தன், சனைச்சரன், பங்கு, கரியன் என்ற பெயர்கள் உண்டு. சனை - மெதுவாக, சரன் - சஞ்சரிப்பவன் என்பது பொருள்.

யமன் கோபம் கொண்டு இவனைத் தண்டத்தால் அடித்ததால் கால் நொண்டி ஆயிற்று என்ற வரலாறும் உண்டு. சனிபகவான் கறுப்பான நிறமுடையவர். கழுகு வாகனம் உடையவர். நான்கு கைகள் உண்டு. வில், அம்பு, கத்தி, க்ரதம் தாங்கியவர்.

நீல நிறமான கொடிகள் கட்டப்பட்ட எட்டுக் கழுகுகள் பூட்டிய தேரில் வலம்வருபவர். சில ஆகமங்களில் சனிக்குக் காகம் வாகனமாகக் கூறப்பட்டுள்ளது. ஜோதிடநூல் பிரகாரம் மகர கும்ப ராசிகளுக்கு அதிபதி சனி. துலா ராசியை உச்ச இடமாகப் பெற்றவர் ஆயுட்காரகர் என்று கூறப்படுகின்றார். இவருக்கு உரிய நாள் சனிக்கிழமை. தானியம் எள். எள்ளின் நெய்யை (எண்ணெயை) விளக்கிட்டு நிவேதனம் செய்தால் இவர் கருணையைப் பெறலாம் என்று எல்லோரும் அறிவோம்.

வான நூலின்படி சூரியனைச் சுற்றிவரும் ஒன்பது கிரகங்களில் ஒன்று. வியாழனுக்கு அடுத்தபடி உள்ள பெரிய கிரகம்: குறுக்களவு சுமார் 73000 மைல் இதைச்சுற்றியுள்ள வளையத்தில் குறுக்களவு 1,70,000 மைல். சூரியனுக்கும் இதற்கும் இடையில் உள்ள தூரம் 89 கோடிமைல். பூமியிலிருந்து சனியின் தூரம் 75 கோடிமைல். சனியில் ஒருநாள் பத்தேகால்மணிநேரம் சனி, சூரியனை ஒருமுறை சுற்றிவர இருபத்துஒன்பதரை ஆண்டுகள் ஆகின்றன. ஒரு ராசிக்கு இரண்டரை ஆண்டு. ஒருராசியிலிருந்து மற்றொருராசிக்குச் செல்லும்போது சனிப் பெயர்ச்சி விழா கொண்டாடப்படும்.

## திருநள்ளாறு :

சனித் தலங்களில் விசேஷமானது திருநள்ளாறு. இங்கு, சனிபகவானுக்குத் தனிச் சந்நிதி உள்ளது மூர்த்தி மிகவும் சிறியது. கீர்த்தி பெரியது. மாடத்தில் உள்ளார்.

திருநள்ளாற்றுப் பெருமான் பெயர் "ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரர்". அம்பிகை "ஸ்ரீ போகமார்த்தபூண்முலையாள்". மற்றும் "ஸ்ரீ பிராணேஸ்வரி" என்பதும் பெயர். "மரகதலிங்கம்" உள்ளது. நகவிடங்கத் தியாகராஜரது நடனம் " உன்மத்த

நடனம்". தலவிருட்சம் "தர்ப்பை". தீர்த்தம் "நளதீர்த்தம்". நளனுக்குக் கலி நீங்கிய இடம்.

சனி பகவானுக்குத் தங்கக் கவசம் உண்டு. வெள்ளி காக வாகனம் உள்ளது. இடையனுக்கு மோட்சம் கிடைத்த இடம். சமணர்களை ஞானசம்பந்தர் வென்ற 'பச்சைப் பதிகம்' பாடிய இடம். கோவில் சோழர்காலத்தில் கட்டப்பட்டது. 1969 இல் ஐந்து லட்ச ரூபாயில் திருப்பணி செய்யப்பட்டது. கோயிலை ஒரு கமிட்டி நிர்வகிக்கின்றது. நிர்வாக அதிகாரி உண்டு. தருமை ஆதீனத்தின் பிரதிநிதியாக, நிர்வாகக் கமிட்டியில் தம்பிரான் சுவாமிகள் ஒருவர் அங்கத்தினராக இருந்துவருகிறார். தற்பொழுது வித்துவான். ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அங்கத்தினராக இருந்து நித்திய விதிகளைக் கவனித்து வருகிறார்.

பிரயாணிகள் தங்க விடுதி ஒன்று உள்ளது. திருநள்ளாறு செல்ல, மாயூரம், கும்பகோணம், நாகை, பொறையார் முதலிய இடங்களிலிருந்து பஸ் வசதி உண்டு. மாயூரம் - காரைக்கால் புகைவண்டி மார்க்கம் உண்டு.

இவ்வாண்டு சனிப்பெயர்ச்சி 10—7—1973 இரவு 10-13 மணிக்கு.

திருநள்ளாறு செல்பவர்கள் தருப்பையில் முடிச்சிட்டும் அதை இரண்டாகக்கிழித்தும் வழிபடுவர். துன்பங்கள் கட்டுண்டு கிழிபடவேண்டும் என்பது ஐதிகம்.

நன்றி — தினமணிசுடர். 1—7—73

## மூன்று உண்மைகள்

பிறர் கூறுகின்ற வன்சொற்களையும் இன்சொற்களாக ஏற்று மகிழ்கின்றவன்; தனக்கிட்டது கூழேயானாலும் நெய் கலந்த சோறாக அதனை மதித்து உண்டு மகிழ்கின்றவன்; கசப்புச் சுவையையும் இனிப்புச் சுவையாகக் கொண்டு மகிழ்கின்றவன்; - ஆம்; இம்மூவரும் இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் 'மெய்ப் பொருளைக் கண்டு' வாழ்கின்றவர்கள்:

— நல்லாதனார். — "வேலன்"

## 'எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை'

### வேத மேற்கோளுடன் பிரதமர் பேச்சு.

கனடா பார்லிமெண்டில் இன்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி பேசியபோது அதர்வண வேதத்திலிருந்து மேற்கோள் காட்டினர். பெரிய வல்லரசுகளின் தீய நோக்கங்களுக்கு எதிராக சிறு நாடுகள் ஒன்று திரளவேண்டும் என்று வலியுறுத்தியபோது, இந்தியா தனது பண்டைய பாரம்பர்யத்திலிருந்து வழுவாது, அதே சமயம், தன்னை நவீனமாக்கிக்கொள்ள முயன்று கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அப்போது அதர்வண வேதத்திலிருந்து ஒரு ஸ்லோகத்தைக் கூறினர். அதன் சாராம்சமாவது:—

"நண்பனிடமிருந்தும் அஞ்ச வேண்டாம். பகைவனிடமிருந்தும் அஞ்சவேண்டாம். தெரிந்தவனிடமிருந்தும் அஞ்சவேண்டாம். தெரியாதவனையும் அஞ்சவேண்டாம். இரவிலும் அஞ்சவேண்டாம். பகலிலும் அஞ்சவேண்டாம். எல்லாத் தரப்பினரும் எனது நண்பர்களாக இருக்கட்டும்" என்பதே அந்த ஸ்லோகம்.

நேற்றுக்கூட பிரதமர் தமது பேச்சை கனடா கவிஞர் எழுதிய கவிதை ஒன்றைக்கூறி முடித்தபோது அது கனடியர்களை மிகவும் கவர்ந்தது.

— தினமணி, ஜூன்-21.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Well maintained, neat, clean Temple.

(Sd.) Justice. Somasundaram,
15—6—73.

# கருவூர்த் தேவரின் கவிதை நலம்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ., பிஎச்.டி.

(மலர் 32. இதழ் 7. பக்கம் 355 - இன் தொடர்ச்சி)

**சமய உண்மைகள் :**

இறைவன் 'யோகியாய் இருந்து உயிர்க்கு யோகத்தைப் புரியும் இயல்பினன். இதனை, 'மங்கையோடிருந்தே யோகு செய்வான்' என்று குறிப்பர் தேவர். (143)

திருவிடை மருதூர்ப் பதிகம் முழுவதும், இறைவனோடு சார்த்தித் 'திருவிடைமருதூர்'த் தலப்பெருமைகளை எடுத்துரைப்பதாகும். மணியினுள் சோதி கலந்தது போலத்தன்னுள் கலந்திருந்தான் இறைவன் என்று குறிப்பது, 'மாமணிச் சோதியான்' என்னும் வாகீசர் வரிக்குறிப்பாக உள்ளது எனலாம்.

" அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்கு
அடியனேன் உள்கலந்து " (176)

என்பது அப்பகுதியாகும். அன்றியும் இறைவன் உயிர்களோடு கலந்திருக்கும் அத்துவிதக்கலப்பின் சித்தாந்த விளக்கம் என்னும் இப்பகுதியைக் கொள்ளலாம்.

**உறவாடும் பாங்கு :**

கருவூர்த் தேவரின் தோத்திரப்பாக்கள் தனி உருக்கம் உடையவையாய்த் திகழ்கின்றன. நெஞ்சம் கலந்து இறைவனுடன் உறவாடுகின்ற பாங்கில் இவையனைத்தும் அமைந்திருக்கின்றன.

" அடியேன், விழுங்கு தீங்கனியாய்
இனிய ஆனந்த வெள்ளமாய் உள்ளம்
ஆயினையே " (113)

" எம்மனங்குடி கொண்டிருப்பதற்கு யானார்
என்னுடை யடிமைதான் யாதோ " (149)

" வந்த நாண் மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனையறியும் என் மனமே " (110)

" உள்புகுந்தடியேன்
நெஞ்செலாம் நிறைந்து நின்றாயே " (115)

" வினைபடும் உடல்நீ புகுந்து நின்றமையால்
விழுமிய விமானமாயினதே " (117)

என்பன போன்ற பலபாடற் பகுதிகளில் நம் நெஞ்சு புகுந்து நின்று அநுபவித்து மகிழ்கின்றது. அப்பகுதிகளில் ஆழ்ந்து நின்றால், அவற்றின் பொருளாழம் நம்மை வேறு நினைவுக்கு நண்ணாத வகையில் நிலைநிறுத்தி விடுகின்றது; இராமனுடைய பேரழகுமிக்க உறுப்புக்களைக் காணலுற்றார், ஓர் உறுப்பினைக் கூர்ந்து நோக்கினால் அதிலேயே நிலைத்து நின்றுவிடும் என்று கம்பர் கூறும் கவிதை இங்கு நினைவிற்கு வருகின்றது. உயர்ந்த கவிதைகளில் உள்ள பொருள் ஆழம் மிகுந்த சொல்லாட்சியின் சிறப்பும் இப்படித்தான் அன்றோ?

## அறம் கூறும் தேவர் :

"பொய்யிலா மெய்யர்க்கு இனியர் எத்தனையும் (171) என்ற பகுதியைப் படிக்குங்கால், வாய்மை யறத்திற்குத் தேவர் தரும் சிறப்பிடம் இனிது விளங்கும். இறைநெறி பற்றி நிற்பார்க்கு உண்மை உணர்வு வேண்டும்; அஃது இல்லாதார் இறைநெறி பற்றி நிற்பதாகக் கூறல் பொய்யாகவே முடியும். "மெய்ம்மை யாம் உழவைச்செய்து" எனவரும் திருநாவுக்கரசர் திருவாக்கும் இக்குறிப்பை உட்கொண்டதே ஆகும். இறைவன் பொய் யில்லாத மெய்யொழுக்கம் உடையார்க்கே இனியன் ஆவன் என்பது சமுதாயத்திற்கு எவ்வளவு விழுமிய அறிவுரை !

இந்த உடம்போடு கூடியுள்ள ஏனைய நான்கு பொறிகளும் உடம்பினை மேல்நோக்கிச் செலுத்த மாட்டாமல் உலகியல் பற்றியே யீர்ப்பனவாகும் தன்மை உடையன. இவற்றின் வழியே ஓடினால் உயிர்க்கு உறுதி கிட்டுவது அரிதே யாகின்றது. இவற்றைத் தம் வழி அடக்கி யாள்வோரே, நிலையான இன்பம் எய்துகின்றனர்; "தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கி" என்று திருஞானசம்பந்தர் பாடுவது இவ்விடத்து எண்ணத்தக்கது, இந்த ஐம்பொறிகளும் பகைகளாக முடியவே, "யார் துணை" என்று மனம்விட்டு அழைத்தால் "அஞ்சேல்" என்று அருள் செய்வான் தில்லைப் பெரும்பற்றப்புலியூர்த் திருச்சிற்றம்பலத்து

ஒருத்தனே என்று உரைக்கும் பகுதி, பொறிவழி ஓடிச்சலிக்கும் உலக மாந்தர் பலர்க்கும் தேவர் வழங்கியுள்ள நல்ல உறுதியுரை ஆகும் ;

"இவ்வரும் பிறவிப் பௌவ நீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே ; யார் துணை யென்னில்,
அஞ்சலென் றருள் செய்வான் கோயில்" (81)

கவிதைகளை ஓதுவார் கூறும் பயன் ;

கருவூர்த் தேவர் தம்முடைய திருக்கடைக்காப்புச் செய்யுட்கள் அனைத்திலும், தம்முடைய செந்தமிழ் இசைப்பாக்களால் சிவபிரானை வழிபட்டார் எய்தும் பயன்களாகச் சிலவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் பல்வேறு உண்மைகள் புலனாகின்றன.

"இருள் கிழித்தெழுந்த சிந்தையரே" (100)

"அகலிருவிசும்பின் முத்தியாமென்றே
உலகரேத்துவரேல் முகமலர்ந் தெதிர்கொளும்
திருவே" (111)

"சீலமாப் பாடுமடியா ரெல்லாம் சிவபதம்
குறுகி நின்றாரே" (121)

"ஆதிச் செல்கையோடுலகில் அரசு வீற்றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே" (143)

"பரமனதுருவமாகுவரே" (151)

"மாட்டிய சிந்தை மைந்தருக்கன்றே
வளரொளி விளங்கு வானுலகே" (161)

"பொருள் மருந்துடையோர், சிவபதமென்னும்
பொன்னெடுங் குன்றுடையோரே" (172)

கோயில், திரைலோக்கிய சுந்தரம், திருவிடைமருதூர் ஆகிய மூன்று ஊர்ப்பதிகங்களில் மட்டும் உரைப்பார்க்கு வரும் பயன்கள் உரைக்கப்பெறவில்லை ; ஏனைய பதிகங்களில் வரும் பயன்களே மேற்காட்டப்பெற்றவை. ஏனையவற்றில் பயன் பகராப் பெருமைக்குற்ற காரணம் யாதென விளங்கவில்லை.

உள்ளத்துக்கண் அறியாமை முதலிய மாசுகள் 'இருள்' தன்மை உடையவை; 'இருள்சேர் இருவினை' என்று திருவள்ளுவரும் இவற்றது இயல்பு குறித்துள்ளார். இந்த இருள் இறைவனுடைய அருட்பெருங்கருணை ஒளியாலே விலகும். அப்போதுதான் உண்மை விளங்கும். 'சொற்பாவும் பொருள் தெரிந்து, தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்து இருளை வாங்காதானை' என்பர் அப்பரடிகளும்; இந்த மல இருள் நீங்கப்பெற்ற சிந்தையே இறைவன் மலரடிச் சார்பு பெறும் மாண்புறுசிந்தை ஆகும். இந்தப் பயனைக் கருவூர்த்தேவரது புண்ணியப் பாட்டு உயிர்கட்கு நல்கும் என்பதே முதலிற் கூறப்பட்டுள்ளது. உலகச்சார்பினின்று விடுதலையும், இன்ப உலகத் திரு எதர்கொள்ளுகையும் இரண்டாவதாகக் குறிக்கப்பட்டன.

இக்கவிதைகளை ஒழுக்கத்துடன், சீலத்துடன் பாடுபவர்க்குச் சிவபதம் குறுகும் என்று, மூன்றாவது பயன் மொழியப்பட்டது: இவ்விடத்துச் சீலத்தற்குத் தரும் சிறப்பிடம், சமய நெறி பின்பற்றுவோரெல்லாம உன்னி உணர்த்தற்கேற்ற ஓட்பம்உடையது ஆம். சீலம் இல்லாதாரது கோலமும், பிறவும், சிவபதத்துட் செலுத்தமாட்டாச் சிறுமை உடையனவே என்பது இங்கு உணர்த்தப்பெறும் உண்மை ஆகும்.

அரசாளும் திரு இம்மையிலும், பின் சிவனுடைய திருவருட் கடலில் திளைத்தலும் கிடைக்கும் என்பது அடுத்து வந்த பயன், 'சாரூபம்' என்பதே 'பரமனது உருவம்' ஆகும் என்பதறைக் குறிக்கப்பட்ட பயன். ஒளி விளங்கும் வானுலகம் என்பது அடுத்த பயன் ஆகும்; இதனைச் சாலோகம்' என்று இயம்புதல் பிழையாகாது. இனி, ஏழாவதாக 'சிவபதம் என்னும் அரிய பொருப்புப் பயனாக உரைக்கப்பட்டது. சிவபதம் என்னும் பொன்னெடுங்குன்று' என்ற உருவக அமைப்பு உளங்கொளத் தக்கது.

## வடிவ வனப்பு:

எழுசீர் விருத்தங்களில் பெரும்பாலான பாட்டுக்களைப் பாடியுள்ளார் தேவர்; தரவு கொச்சகக் கலிப்பாவாகத் திரைலோக்கிய சுந்தரப் பதிகம் அமைந்துள்ளது. எழுசீர் விருத்தங்கள் ஒரு புதிய திறனைக் கருவூர்த் தேவருடைய கவி நலத்தால் பெற்று விழுமிய வடிவங்களாக விளங்குகின்றன, அவற்றை நான்கும் மூன்றுமாய் இருபகுதிப்பட ஒருவரியுட் கையாண்டு படிப்பவர் நெஞ்சை உருக்கிடும் வன்மை, கருவூர்த் தேவர்க்கே கைவந்த கலை வன்மையாக உள்ளது.

**சோழரும் தேவரும் :**

இராசராசேச்சரத்து இறைவனுக்குக் கற்கோயில் எழுப்பினார் கருவூர்த்தேவர். விண்ணைத் தொடும் கோபுரம் சமைத்தார் வளவர்; நெஞ்சைத் தொடும் இசைப்பாச் சமைத்தார் தேவர். கற்பனைக் கெட்டாக் கடவுட்குப் பேருருவம் அமைத்துக் கை தொழுதார் சோழர்; கருத்துக்கெட்டாக் கடவுட்குக் கவியுருவம் அமைத்து மனங்கனிந்தார் தேவர்; பெருவுடையார்க்குக் கற்றளி அமைததன் மூலம் அரசியல் - சமுதாய வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்டார் மாமன்னர் இராசராசர்; பெருவுடையார்க்குச் சொற்றளி அமைத்ததன் மூலம் திருமுறை - இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றுவிட்டார் இவ்வருட் கவிஞர். ஆம்; கருவூர்த் தேவர் கவிதை, பாடித் தொழுவோர்க்குத் திருவருள் இன்பந்தோய்ந்திடச்செய்தல் அறிந்திடும் ஒன்று.

---

* இக்கட்டுரையின் மேற்கோட் பாட்டுக்களுக்கு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் (1949) ' திருவிசைப்பா திருப்பல்லாண்டு" பதிப்பின்படி எண்கள் தரப்பெற்றுள்ளன.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

**Sri Sattanathaswami Devasthanam Sirkazhi.**

"I had the divine luck to pay a visit to this holy temple of hoary past full of traditions of saivite culture of his Holiness Thirugnanasambandar. The temple is kept very clean, spick and span at every square inch of wide area. The temple superintendent is a dedicated soul, a real karma yogi, who is a devoute worker coming from a rich family. If all temples are like this in India and all managers are as much dedicated, India will be keeping up its vedic traditions. The temple is a kailasam on earth.

(Sd) P. R. Krishnan,

Divisional Engineer Telegraphs, Tanjore.

# தமிழ் செய்த திருமூலன்

## நீதிபதி, கனம். S. மகராஜன் B. A., B L.,

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர் திருமூலர் என்று சொல்லுகிறார்கள். குறைந்த பக்ஷம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாவது அவர் இருந்திருக்க வேண்டும். ஆனால். அவர் சிருஷ்டி உத்ஸாகத்தோடும், கவிதா காம்பீர்யத்தோடும் பாடி யிருக்கும் உண்மைகள் ஆறாத புதுமையோடு, இன்றும் நமது இதயத்தைத் தொட்டுப்பேசுகின்றன; இதயக் கல்லைப் பிசைந்து கனியாக்கும் அமரகீதங்களே அவரது பாட்டுக்கள்.

மனித வாழ்க்கையின் மர்மங்களையும், சிருஷ்டியின் ரகசியங் களையும் அறியாத நமக்கு ஏதோ. கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்ட மாதிரியல்லவா இருக்கிறது? எங்கிருந்து வந்தோம், எதற்காக வந்தோம், எங்கே போகிறோம் என்றே புரியவில்லை. மலைமலையாக வருகிறது துன்பமும், கஷ்டமும் அதையெல்லாம் சமாளிக்க முடியாமல் அலமந்து அலறுகிறோம். பாழும் வாழ்க்கை யிலே புளிப்பும், கசப்பும் வெறுப்பும் தட்டிவிடுகிறது. 'மனித சரித்தரம் ஓர் அர்த்தமற்ற பொம்மலாட்டம் போல, காரண காரியத் தொடர்பற்ற பைத்தயக்காரக் கனவைப் போல, தாள மில்லாத கூத்தைப் போலக் காட்சியளிக்கிறது.

ஆனால், திருமூலருக்கோ நம்மை ஆட்கொண்ட மருட்சியும், மயக்கமும் லவலேசமுங்கூடக் கிடையாது. நம்மைத் திணறடிக்கிற த்ரையிருக்கிறதே, அதை எப்படியோ கிழித்தெறிந்துவிட்டு, அதற்கு அப்பாலுக்கப் பாலாயிருக்கும் மூடு மர்மத்தை அவர் எட்டிப் பார்த்துவிட்டார் காரண காரியத் தொடர்பு பளிச் சென்று தெளிவாகிவிட்டது. வாழ்க்கையை விளைவித்த வித்து எது என்பதை யறிந்தார் இன்பத்துன்ப வளையத்தை நொறுக்கித் தகர்த்து கால சக்கரத்தின் சுழற்சியை மீறி, விடுதலை பெற்று விச்வ வெளியையடையும் மார்க்கத்தைக் கண்டார். பெருமறைகள் கூச்சத்தால் பேசாது மறைத்த உண்மைகளை விளம்பரப்படுத்தனார். இசை வடிவாயிருக்கும் ஆனந்தக் கூத்தனது பண்புகளை தெய்வீகக் கவிதையிலே வடித்து உருவாக்கினார். பாடவல்லார் நெறியைப் பாடியும், ஆடவல்லார் நெறியை ஆடியுந்தானே காட்ட முடியும்? இந்த ஆடல் பாடலிலே உதயமானதுதான் திருமந்திரம் என்ற நூல்.

சாதாரணமாக, உலகத்திலே சௌந்தர்ய உணர்ச்சி மங்கிக் குரூரமும், அலங்கோலமும் அதிகரிக்கும் போது கடவுள் ஒரு கவிஞனைத் தன் தூதனாக அனுப்புகிறார், அழகின் தத்துவத்தை நிலைநாட்டுவதற்காக. அன்பு நெறி மறைந்து மனித சமுதாயத்தில் மிருகபுத்தி தாண்டவமாடும் போது, ஒருபுத்தனைத் தன் தூதனாக அனுப்புகிறார், காருண்யத்தை நிலைநாட்டுவதற்காக. சமய உணர்ச்சி வறண்டு, கடவுள் ஞானமற்று, உலகம் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்த போது, இறைவன் திருமூலரைத் தன் தூதனாக அனுப்பிச் செம்மை நெறியைப் பரப்பினார் என்று தான் சொல்ல வேண்டும். தான் செய்ய வந்த பணி இன்னது என்பதைத் திருமூலரே மிகுந்த நிச்சயத்தோடும் துணிச்சலோடும் சொல்லுகிறார் :

> ' என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
> தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே "

' இவ்வளவு ஞானமும், தெளிவும், நுட்பமும் எனக்குக் கொடுத்திருக்கிறானே இறைவன், அதற்கு வேறு என்ன காரணமிருக்க முடியும் ? எல்லையற்ற டப்பப்பிரியனாகிய அவன், தனது கல்யாண குணங்களையெல்லாம் நல்ல, இனிய தமிழிலே இவன் பாட வேண்டும் என்ற நோக்கத்தோடு தானே என்னை நேர்ந்து விட்டிருக்கிறான் ? ஆகையால் பாடுகிறேன், என்று கச்சை கட்டிக்கொண்டு பாட ஆரம்பிக்கிறார்.

பாடின பாட்டு ஒன்றிரண்டல்ல, மூவாயிரம் பாடல்கள், ஆண்டுக்கு ஒரு பாடலாக, மூவாயிரம் ஆண்டுகள் இருந்து, மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்பது வரலாறு. ஒவ்வொரு பாட்டும் அவ்வளவு அருமையாக இருந்தபடியால் ஒரு பாட்டு உருவாகி வெளி வருவதற்கு ஒரு வருஷமாவது பிடித்திருக்கும் என்று எண்ணி நமது முன்னோர்கள் இப்படியெல்லாம் கதை கட்டி அவரது நூலை ரஸித்து உபசரித்தார்கள்.

கொஞ்ச காலமாகத்தான் தமிழ் நாட்டார் திருமூலரை அடியோடு மறக்க ஆரம்பித்தார்கள் அவர் பாடல்களிலுள்ள முடிச்சுகளை அவிழ்ப்பது கஷ்ட சாத்தியமாகிவிட்டது. அவர் அடைத்து வைத்த பொக்கிஷத்தைத் திறப்பதற்குத் திறவு கோலைத் தேட வேண்டியிருக்கிறது. அவரது பரிபாஷையில் பழக்கமுள்ள தமிழனே இல்லையோவென்ற ஐயம் ஏற்பட்டு விட்டது. இருட்டறைக்குள்ளே யிருக்கும் குருட்டுக் கிழவனைப் போல இழந்த சாவியைத் தேட முயற்சி செய்கிறது இந்தக் கட்டுரை.

மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு இன்று வரை எத்தனை எத்தனையோ தத்துவ சாஸ்திரிகள் இறைவனது தன்மையையும், சிருஷ்டி தத்துவத்தின் பண்புகளையும் கெஜக் கோல் கொண்டு அளந்துவிடலாம் என்று நம்பி அறிவாராய்ச்சித் துறையிலே இறங்கினார்கள். ஐரோப்பாவில் நியூட்டன் டார்வின் முதலியோருடைய பூத பௌதிக ஆராய்ச்சியின் விளைவாக பிரபஞ்சத்தின் சூக்ஷ்மத்தைக் கண்டுவிட்டதாக மக்கள் கருதினார்கள். பிரபஞ்சம் எல்லாமே தானே இயங்கக் கூடிய ஒரு யந்திரம், அதற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் துணையில்லாமலேயே அந்த யந்திரம் தான்தோன்றியாய் அமைந்துகொண்டது. க்ரூட் ஆயிலும், பெட்ரோலும் இருந்தால் மனிதன் தன்னுடைய சக்தியால் தன்னிஷ்டப்படி அந்த யந்திரத்தைத் தன்வசப்படுத்திவிடலாம் என்றெல்லாம் பகற் கனவு காண ஆரம்பித்தான். ஆனால் ஐன்ஸ்டைன் (Einstein), ப்ளாங்க் (Planck) முதலியோருடைய விஞ்ஞான ஆராய்ச்சி பத்தொன்பதாவது நூற்றாண்டுத் திமிரையெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டது. நாம் பார்க்கிற பொருள்கள் அணுக்களாலும், பரம அணுக்களாலும் ஆனவை என்ற நம்பிக்கை போய் அவைகள் எல்லாமே ஐம்புலன்களுக்குப் புறம்பான சக்தி அலைகள் என்ற சித்தாந்தம் பிறந்தது. உலக மெல்லாம் ஒரு யந்திரம் என்ற முடிவு முறியடிக்கப்பட்டது. விஞ்ஞானிகளிடத்திலே இதற்கு முன்னில்லாத பணிவு பிறந்தது. விஞ்ஞானத்தின் சிறுமையைச் சிந்தனை செய்துபார்த்தார் ஐன்ஸ்டைன். "நாம் அறிந்த உலகத்தின் எல்லையில் நின்று கொண்டு, அறியாத உலகத்தை எட்டிப் பார்க்கும் போது, அதன் பிரம்மாண்டமும், அகண்டமும் நம்மைத் திணறடிக்கிறது; நமது அறியாமையை நினைக்கும் போதே குடல் பதறுகிறது" என்று சொன்னார் அவர்.

இந்தப் பதட்டம் எல்லாம் திருமூலருக்கு ஏற்படவேயில்லை, இறைவனுடைய பரிபூரண அறிவோடு மனிதனுடைய சிற்றறிவை ஒத்துப் பார்த்தவுடனேயே அவருக்கு உண்மை துலங்கிவிட்டது. தன்னுடைய அறியாமையின் ஆழத்தையும், அகலத்தையும் உணர்ந்த மாத்திரத்திலேயே, அவருக்கு உண்மையான ஞானம் பிறந்துவிட்டது. உடனே கும்மாளம் போட ஆரம்பிக்கிறார். "நான் மூவாயிரம் பாடல்கள் பாடப்போகிறேன்; எதற்காக? என்னுடைய அறிவை உங்களுக்குச் செப்பிவிடலாம் என்ற நோக்கத்தோடா? இல்லை என்னுடைய அறியாமையை சவிஸ்தாரமாக விளம்புவதற்காக," என்று ஆரம்பிக்கிறார் திருமந்திரத்தை.

" ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நிகளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர்அறியாமை விளம்புகின்றேனே "

என்ன துணிச்சல்! அந்த ஏகாரத்திலே இருக்கும் தெம்பு எவ்வளவு! அறியாமையை உணர்ந்துவிட்டோம் என்ற தெப்பு தான். ஆனால், அந்த உணர்ச்சியிலே பரிபூரண ஞானத்தின் முத்திரையை அல்லவா காண்கிறோம்!

" வேரறி யாமை விளம்புகின் றேனே "

என்று நாக்கைச் சுழற்றி விழுகிறது முத்திரை.

சாக்ரடீஸ் என்ற கிரேக்க தத்துவ சாஸ்திரி தன் தேசத்திலுள்ள பெரியோர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று, ஜவாப் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய அறியாமையை விளக்கி வந்தார். எல்லோரும் அவருடைய விரோதிகள் ஆனார்கள், நமது அறியாமையைக் காட்டிக் கொடுக்கிறானே இவன் என்று. கடைசியாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு நீதிபதிகள் முன் நிற்கிறார் சாக்ரடீஸ். மதத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார் என்பது குற்றச்சாட்டு. நீதிபதிகளும், இவரிடத்தில் அகப்பட்டுக் கஷ்டப்பட்டவர்கள். சிரச்சேத தண்டனை கொடுக்க வேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மேதாவி சாக்ரடீஸுக்கு விஷயம் தெளிவாகத் தெரிந்துவிட்டது. தனது கடைசிப் பிரசங்கத்தில் அவர் சொன்னார் " கிரேக்க தேசத்திலேயே பெரிய அறிவாளி தான் என்று டெல்பியிலிருக்கும் அசரீரி சொன்னது ஆனால் அப்படியொன்றும் அறிந்தவன் என்று என்னைச் சொல்லிக்கொள்ள முடியாது. நமது நாட்டிலிருக்கும் பல உத்தியோகஸ்தர்களும், அரசியல் வாதிகளும் தங்களைப் பெரிய அறிவாளிகளாக மதித்து வந்தார்கள். நான் அவர்களை அணுகி வாதித்துப் பார்த்ததில் அவர்களுடைய அறியாமை ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நாட்டிலே நான் ஒருவன்தான் எனது அறியாமையை உணர்ந்தவன் என்று தெரிந்து கொண்டேன். ஆகவே, அந்த டெல்பியிலிருக்கும் அசரீரி வாக்கு உண்மையென்றே இப்பொழுது தோன்றுகிறது," என்றார்.

ஆகவே, தன்னுடைய அறியாமையை எப்பொழுது மனிதன் உணர ஆரம்பிக்கிறானே, அப்பொழுதே அவனுக்கு நிலையான அறிவு பிறக்கிறது. இதைத்தான் வள்ளுவர் சொன்னார்,

" அறிதோ றறியாமை கண்டற்றுல் "

என்று. நேற்று வரைக்கும் பூமி தட்டையாக இருப்பதாக மனிதன் நினைத்து வந்தான். இன்று பூமி உருண்டையாக இருக்கிறது என்று அறிகிறுன். நேற்றைய 'அறிவை' இன்றைய "அறிவோடு" ஒத்துப் பார்க்கும் போது நேற்றிருந்தது அறியாமையென்று தெரிகிறது. இன்றைய அறிவை நாளைக்குக் கிட்டப்போகும் அறிவோடு ஒத்துப் பார்க்கும் போது, இன்றைய அறவும் அறியாமைதான் என்று விளங்கும். இவ்வாறு படிப்படியாக ஒத்துப்பார்த்துக்கொண்டே போகிறுன். கடைசியாக

" சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் அண்ணலது "

அறிவோடு தனது அறிவை ஒத்துப் பார்க்கிறுன். பிறக்கிறது ஞானம்.

" ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை "

என்று கூத்தாடுகிறுன், திருமூலரைப் போல.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali

" The temple struck me as very well maintained and clean Due to the courtesy of the management I was able to have a good dharsan. The history of the temple and details of each deity was clearly explained to us for our enlightenment. It would be nice if they are explained to all pilgrims and by way of better distribution of printed literature. May thanks to the Mangement "

(Sd) B. Ramakrishnan,
Asst Collector, Customs and Central Excise, Pondichery.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 32. இதழ் 7. பக்கம் 366 இன் தொடர்ச்சி )

## 63. சமணரைக் கழுவேற்றியது

பஞ்சவனின் நோயைப் பாலறுவாயர் தீர்த்தமை படித்தோம். சமணர்களோடு வாதிட்டு அவர்களைக் கழுவேற்றிய வண்ணம் இனி, பார்ப்போம்,

அமைச்சர் குலச்சிறையாரும் அரசியும் காழிப் பிள்ளையாரை வணங்கி 'நாங்கள் வேண்டும் குறையொன்றுளது அதனையும் தீர்த்து அருள்புரியவேண்டும்' என்று விண்ணப்பிக்க, ஞான சம்பந்தர் 'எந்தையார் திருவுள்ளம் அறிவேன்' என்று கூறிக் கொண்டு ஆலவாய்க் கோயிலுள் புக, அரசியும் அமைச்சரும் 'உடன் சென்றார்கள். கன்னிநாடெங்கும் மூடிய இந்தக்கார் அமண் காடு நீங்கவேண்டும். காயமே பொறுத்து கைதவம் பெருக நோற்கும் இவர்கள் - நீங்கள் உரைசெய்த வேதவேள்வியை நிந்தனை செய்த இவர்கள் தகுந்த தண்டனை பெறவேண்டும்' என்று அரசி கூறவும் வானில் ஓர் அசரீரி ஒலித்தது. 'உம் கருத்தே எமக்கும் ஒத்தது, அமணர் தோற்க ஞானக் குழந்தை வெற்றி பெறும்' என்ற ஒலி எல்லாருக்கும் மகிழ்ச்சியைத் தர அவரவர்கள் தம் தம் இருப்பிடம் சென்றனர்.

அடுத்தநாள் அமைச்சரேறும், அரசியும் காழிப்பிள்ளையார் திருமடத்திற்குச் சென்று அருகரை வெல்லும் வழியை ஆலோசித்தனர். சம்பந்தரோடு அரசவை சென்றனர். வேந்தனிடம் சமணத்தை ஒடுக்கி சைவத்தை மேலோங்கச் செய்யவேண்டும் என்று விண்ணப்பித்தனர். அரசனது இசைவையும் ஆலவாய் அண்ணலின் உத்தரவையும் பெற்றுக்கொண்டார் சண்பையர் கோன்.

**கனவைக் கூறிக் கடிந்தனர் :**

சமணர்களின் மனைவிமார்கள் அவர்களைப் பார்த்து பலவாறாக இடித்துக் கூறினர். 'பாண்டியனின் வெப்பு நோயை

மாற்றும் வழியின்றி மழலைவாய்ப் பாலனிடம் தோற்றீர். சாம்பல் பூசியதுடன் பார்பணிந்தவனைக் கும்பிடத் தொடங்கிவிட்டான் அரசன். இனி உங்களுக்கு உய்வில்லை' என்று ஏசவும் சமணர்கள் சர்பந்தருடன் வாதிடக் கிளம்பினார்கள். அப்போதும் அம் மாதர்கள் தடுத்து 'நாங்கள் கெட்ட கனவுகள் கண்டோம்; நீங்கள் யாவரும் தோற்பது போலவும், நமது பள்ளியிடங்களில் சூலப்படையேந்திய சைவர்கள் உலாவுவதுபோலவும், கண்டோம். கன்னிப் பருவத்தில் துறவு பூண்ட அன்னங்கள் - கணவனைத் துறந்த ஆரியாங்கனைகள் - கணவனை இழந்த அக்குசைகள் வாழும் இடங்களை யெல்லாம் இளைய களிறொன்று சிதைத்தது. அத்துடன் அசோக மரத்தையும் அடியோடு பெயர்த்தது. சூலத்திலும் கழுவிலுமாக சமணர்கள் ஏறி மாய்ந்தார்கள். இந்திரசாலம், மோகனம், ஆகருடணம், அதிரிச்சயம், அஞ்சனம், வசியம், வாதம், வாத்தம்பம் போன்ற உமது சித்துக்கள் உமக்குப் பயன்பட வில்லையே. ஐயகோ! அவைகளை அனல் விழுங்கியதா? புனல் விழுங்கியதா? எது எப்படியானாலும் நீங்கள் வாதிடச் செல்லவேண்டா" என்று மனைவியர் தடுத்தனர். அதோடு ஆபிசாரவேள்வியில் கரியும், ஆவும் நாகமும் எழுப்பிய நுங்கள் முன்னோர் போல உங்களுக்கு ஆற்றலும் இல்லை என்று இடித்தும் உரைத்தனர். மனைவியர் சொற்கேட்பது பழுதென்று அவர்கள் அறியாதவாறு சமணர்கள் வெளிச் சென்றனர். தீய சகுனங்களும் பறவைகளும் தடைசெய்தன, சமணர்கள் அவற்றை இலட்சியம் செய்யாமல் விரைந்தனர்.

அப்போது திருவாலவாய்ப்பெருமானைத்தரிசித்துக்கொண்டு ஞானசம்பந்தர் வந்துகொண்டிருந்தார். கதிரவனை மேகம் சூழ்ந்ததுபோல் அவரைச் சமணர்கள் சூழ்ந்துகொண்டனர். எல்லோரும் வேந்தனின் அவைக்களம் சென்றனர் சிறந்த ஆசனத்தில் இளஞாயிறுபோல் ஞானசம்பந்தர் இருக்க; சமணர்கள் அரசனைப்பார்த்து 'அரசே! காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோலாகும் இந்தச் சிறுவன் உமது வெப்பு நோயைத் தீர்த்த செயல். நண்டும் நத்தையும் செல்லும்போது ஒழுகும் நீரால் சிலநேரம் எழுத்துக்கள் உருவாகுவதுபோல்; இவன் கூறிய சொற்கள் மந்திரமாயின. கையிலிருந்த சாம்பலை மருந்தாக்கிவிட்டான். இப்படியெல்லாம் உன்னை மயக்கிய இவன் தங்களுடைய மந்திரங்களை எழுதிய ஏட்டை நெருப்பில் இட வேண்டும். நாங்களும் எங்களின் மந்திரங்களை அப்படியே எழுதி அனலிலிடுவோம். யாருடைய ஏடு வேகாமல் இருக்கிறதோ. அவரது சமயமே உயர்ந்தது என்று கொள்க' எனப் பணிந்து வேண்டினர்.

இன்னுமொன்று உண்டு. அப்படி நடக்கும் சோதனை இந்நகருக்கு வெளியில்தான் அமையவேண்டும். இல்லையானல் சிவபெருமான் இவர்கள் பக்கம் சார்ந்து எங்களுக்கு வஞ்சனைசெய்து விடுவான் என்று கூறினர். திருஞானசம்பந்தரும் இக்கூற்றுக்கு இசைவுதந்தார். அரசன், அரசி, அமைச்சருடன் தன்மைந்தன் செயல்காண ஆலவாய் அண்ணாலும் அங்கயற்கண்ணியும் சென்றனர். அங்கே சமணர்கள் மந்திரத்தால் எரியூட்டித் தம்மனைவியர் வயிற்றிலும் பற்றச்செய்தனர். தமது மந்திரங்களை எண்ணாயிரம் சமணர்களும் எழுதி நெருப்பிலிட்டனர். அவை கரிந்து சாம்பராயின.

ஞானசம்பந்தர் தாம் பாடிய தேவாரத் தொகுப்பில் கயிறு சார்த்திப் பார்த்து "போக மார்த்த பூண்முலை" என்றபாட்டை எழுதி அனலிலிட ; அது நீரில் கிடப்பதுபோல் பச்சென்றிருந்தது. மக்களும் மன்னனும் இறும்பூதெய்தினர். சமணர்கள் இப்போதும் தோல்வியை ஏற்காமல் இது நீர் கற்ற அக்னிக் கட்டு என்ற வித்தையினுல் சாத்தியமாயிற்று இனி, நாம் வைகையில் இப்படிப் போட்டுச் சோதிப்போம் எதிர்த்துவரும் ஏடுடையார் வென்ருர். மற்றவர் அவர்களுக்கு அடிமையாவர் என்றனர். ஆனுல் சிவனைப்பழித்த இவர்களுக்கு இது போதுமான தண்டனை இல்லையென்று எண்ணி கழுவேற அவர்கள் சம்மதித்தபின், பிள்ளையார் " வாழ்க அந்தணர் வானவர்" என்ற பதிகமெழுதி வைகையில் போட்டார். சமணரிட்ட ஏடு ஆற்ரேடு செல்ல, காழி வேந்தரின் ஏடு நீரோட்டத்தை எதிர்த்து விரைந்து முன்னேபோகியது. மக்கள் வியப்பால் செயலிழந்து நின்ருர்கள். சமணர்களே ஒப்புக்கொண்டதனுல் குலச்சிறையார் கழுமரங்களைச் செய்துகொண்டுவந்து மன்னன் முன் வைத்தார்.

மானம்மிக்க சமணர்களில் சிலர் தாமே கழுவில் ஏறி உயிர் விட்டனர். உயிர்வாழ விருப்பம் கொண்டவர்கள் திருநீற்றைப் பூசியும், திருநீறு கிடைக்காதவர்கள் பசுவின் சாணத்தைப் பூசியும், அதுவும் கிடைக்காதவர்கள் பசுவின் கன்றைத் தோளில் சுமந்தும் சைவ நெறி சார்ந்து தப்பினுர்கள். அப்போது காழிப் பிள்ளையார் அவர்களைப் பார்த்து 'எங்கள் பெருமான் கருணை நிறைந்தவன், சைவ நெறி சார்ந்து நீங்கள் முத்திபெறுங்கள்' எனக் கூறினுர். எல்லாவற்றிற்கும் மேலானவன் சிவனே என்பதைக் குருமொழிபோல் அனலேயன்றி வேகவதிநீரும் உணர்த்திற்று வேந்தனுக்கு.

பொருப்பே சிலையாய்ப் புரங்கடந்த
புனிதனேயெத் தேவர்க்கும்
விருப்பேய் போகம் வீடுதரு
மேலாங் கடவு ளென நான்கு
மருப்பேய் களிற்றுன் முடிதகர்த்தான்
மருமா னறியக் குருமொழிபோல்
நெருப்பே யன்றி வேகவதி
நீரும் பின்னர்த் தேற்றியதால்.

பின்னர் ஏட்டைத் தேடிக் காழியர்கோனும் அடியார்கள் புடைசூழ மேற்றிசை நோக்கிச் செல்ல, அதுவரை கண்களுக்குப் புலனாகிய ஏடு அங்கே மறைந்தது. அங்குள்ளோர்களைப் பார்த்து இவர்கள் இங்கு ஏதேனும் விசேடமுண்டோ என்று கேட்க, அவர்கள் தெரியாதேயெனக் கையை விரித்தனர். ஞானசம்பந்தர் வேத முதல்வன்மேல் அங்குநின்று பதிகம்பாட அப்போது வில்வக் காட்டினுள் சுயம்புவான தன்னுருவைக் காட்டினான் பெருமான். தன் வடிவத்தைக் கிழ வேதியனாக மாற்றிக்கொண்டு 'நீ என் இளைய மைந்தனைப்பாய்' என்று பரிந்துகூறி விபூதி அளித்து அணைத்து மகிழ்ந்தார். இப்பால் ஏடு ஏதாகிலும் வந்ததாஎன்று பிள்ளையார் கேட்க, கிழவர் ஏட்டைக் காட்டி 'நீ இன்னமும் பன்னாள் எம்மைப்பாடி, புன்னெறி ஒழுகுவாரைவென்று பின்னர் புனிதவீடு பெறுக' என்று ஆசி கூறி மறைந்தார்.

ஞானசம்பந்தர் எல்லாம்வல்ல சோமசுந்தரப் பெருமானே இவர் என்றுணர்ந்து நெகிழ்ந்து பாடினர். அவ்விடம் திருவேடகம் எனப் பெயர்பெற்றது. வேந்தன் பிள்ளையாரின் பெருமை உணர்ந்து அறியாமையோடு தான் செய்த பிழைகளைப் பொறுக்கவேண்டினன். அங்கே சம்பந்தரோடு ஓராண்டுதங்கி பூசை நியமங்களைச் செய்துவந்தான். பின்னர் ஞானக்குழவியார் வடக்கு நோக்கித் தலங்களைத் தரிசிக்கக் கிளம்ப; அரசனும் அரசியும் குலச்சிறையும் பிரியாவிடைபெற்று மதுரைதிரும்பினர். பல்லாற்றானும் அவர்களுக்குத் தேறுதல்கூறி சோணாட்டிற்கு எழுந்தருளினர் சம்பந்தர். சைவப் பயிர் காக்கும் காவலனாக பாண்டியன் மாறி அரசோச்சினன்.

ஞானசம்பந்தர் என்ற களிறு ஞானமாமதநீர் சோர கடம்பவனத்தில் நுழைந்து சமணத்தருக்களை ஒடித்து வெண்ணீறென்ற புழுதியை எங்கணும் வாரியிறைத்துப் பெருமையுற்றது.

ஆலவாய்ப் பெருமானின் திருமடைப்பள்ளிச் சாம்பல் அனுகற்பம் உப கற்பம் போன்ற விபூதிகளைக் காட்டிலும் சிறந்து விளங்கி மேன்மையுற்றது. (அடுத்த இதழில்நிறைவுறும்)

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் - உரையும்

**உரையாசிரியர் :-**

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 32. இதழ் 3. பக்கம் 183 இன் தொடர்ச்சி )

62 உய்யவோர் உறுதிகாணேன் உழுவையின் உரிமேற்
[போர்த்த
மெய்யனே உன்னை யல்லால் வேறுமோர் தெய்வந்
[தன்னை
ஐயனே நினையேன் போற்றேன் அஞ்சலி புரியேன்
[உன்றன்
செய்யதாள் எனக்குத் தந்தாள் திருவையாற்
[றமர்ந்த தேவே.

சொ - ள் :- உழுவையின் உரிமேல் போர்த்த மெய்யன் ஏ - (தாருகவன முனிவர் முயன்று ஏற்றிய கொலைவேள்வியினின்று தோன்றிய) புலியினுடைய தோலினை மேலாடையாகப் போர்த்தி யருளிய திருமேனியினை யுடையவரே! ("புலித்தோலை-யரைக் கசைத்து", என்பதும் "கொல் - புலித்தோல் நல்லாடை" என்பதும் திருமுறைகளாம்) ஐயனே - வியக்கத்தக்க அழகிய வரே (தூயவரே), திரு ஐயாறு அமர்ந்த தேவே! - திருவை யாறெனும் திருத்தலத்தில் எழுந்தருளிய மகாதேவரே! உய்ய ஓர் உறுதி காணேன் - அடியனேன் பிறவிக்கடலில் நின்றும் தப்புவதற்காக ஒரு உறுதிப்பாட்டினையும் காண்கிலேன், (காணும் வழி அறியேன்), உன்னை அல்லால் - தேவரீரை யல்லாமல், வேறும் ஓர் தெய்வம் தன்னை - தனியாகத் தனியருள் புரியும் ஒரு தெய்வமுண் டென்று அத்தெய்வந்தன்னை, நினையேன் - கன விலும் கருதவும் மாட்டேன், போற்றேன் - புகழ்ந்து துதி புரிதலையுஞ் செய்யேன், அஞ்சலி புரியேன் - கைகூப்பி வணங்கு தலையும் செய்கிலேன் (ஆகலின் அடியவனுக்கு) உன் தன் - தேவரீருடைய, செய்யதாள் - செவந்த தாமரையாகிய திருவடி களை, தந்து - எனக்கு அருளி, ஆள் - ஆட்கொண்டருளு வீராக (எ-று.)

(கு-ரை) உய்தல் - கடைத்தேறல். (பிறவிப் பெருங்கடலினின்றுங் கரையேறல்) உறுதி - செம்மையான நெறி. உழுவை - புலி. ("கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை," "படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும்" என வருந்திருமுறைகளால் புலித்தோலாடையுடுத்தியிருக்கும் பொற்பு வற்புறுத்தப்பட்டது. இப்புலி தாருகவன இருடிகள் இயற்றிய ஆபிசார வேள்வியினின்றும் வந்ததாகும். புலியுரி போர்த்து முனிவர்கட்கு மெய்ப்பித்தலின் மெய்யனே என்றார்) ஐயன் - அழகினன் பிறவிப் பெரும்பிணிக்கு மருந்தாகலின் செய்யதாள் (நற்றாள்) எனப்பட்டது. தே - செம்பொற்சோதி. ஏகாரம் - தேற்றம்.

63 தேவரிற் சிறந்த கேழல் திணிகெழு தடவுக் கோடும்
மாவறை குமுறும் வேலை யுழக்குக மடத்தி னோடும்
தாவுதூண உதித்த சிங்கத் தலையும் வேய்ந்தருள்
[நின்தாளை
மேவியான் தொழவந் தண்டாய் விமலவை யாற்று
[ளானே

சொ - ள் தேவரின் சிறந்த கேழல் திணிகெழு தடவு கோடும் - தேவருள் சிறந்த (புருடோத்தமன் எனப்பெயரிய) தேவனாகிய திருமாலினுருவமாகிய பன்றியின் திண்ணிய விளங்குகின்ற வளைந்த கொம்பினையும் (பல்லையும்), மா அறை குமுறும் வேலை உழக்கு கமடத்தின் ஓடும் - பூமியாகிய கரையினை அறைந்து மோதி ஒலிக்கும் கடலிடத்தைக்கலக்குதலைச் செய்யும் அத்திருமாலாகிய யாமையின் முதுகு ஓட்டையும், தாவு தூண் உதித்த சிங்கத்தலையும் - (தானே வலிமை) வலிய பருத்த தூணிடத்துத் தோன்றிய திருமாலாகிய அந்நரசிங்கத்தின் தலையையும், வேய்ந்து அருள் - பரம்பொருளாதலை கட்டுதற்குரிய அணிகலன்களாகத் தரித்தருளிய. விமல - மேலான மலரகிதனே, ஐயாற்றுளானே - திருவையாற்றில் எழுந்தருளியுள்ளவனே, நின் தாளை யான் மேவி தொழவந்து ஆண்டாய் - தேவரீருடைய திருவடிகளை அடியனேன் பொருந்தித்தொழுதுய்யுமாறு எழுந்தருளி வந்தாண்டனை (எ - று).

(கு - ரை) தேவரிற் சிறந்த கேழல் - வராக அவதாரம் ஆகிய திருமால். கேழல் - பன்றி. தட - பெருமை. "தடவுங் கயவும் நளியும் பெருமை" என்பது தொல்காப்பியம். "ஏனத் தெயிறு கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே"

என்பது திருமுறை. கமடம் - யாமை (கூர்மம்) நரசிங்கம் இரணியனைக்கொன்ற வரலாறு குறிக்கப்பெறுகின்றது நரசிங்க வடிவினை வீரசிம்புளாகிய சரபம் வதைத்தமை குறிக்கப்பெற்றுளது. இந்நிலை சரபபுராணத்தாலறியக்கிடக்கும். இப்பாட்டில் சிவபரத்துவம் சிறப்பித்துச் செப்பப் பெற்றுளது ஐயாற்றுளான் - திருவையாற்றுப் பெரும் பதியின்கண் எழுந்தருளியிருப்பவன். முத்தித்தலங்களுள் ஒன்றாகலின் ஊரின்பெயரினைக் குறித்துள்ளார். தொழல், தொழுகை, வணங்கல் வழிபடல் முதலியன ஒருபொருளவாம். "நற்றாள் தொழார் எனின்" "வணங்காத்தலை" என்பன திருக்குறளாம். ஏகாரம், விளியின் கண்வந்தது.

64 ஆனக முழங்கும் ஐயாற் றண்ணலே இரவி திங்கள்
வானமா ருதந்தீ நார மானிலம் புருடனாகி
ஊனமில் உருவமாகி உயிர்களுக் குயிராய் நின்ற
ஞானநா யகமே! உன்னை நானுணர்ந் திடல் எவ்வாறே.

சொ-ள் இரவி திங்கள் வானம் மாருதம் தீ நாரம் மால் நிலம் புருடன் ஆகி - பருதியும் திங்களும் விண்ணும் காற்றும் தீயும் நீரும் பெரிய பூமியும் இயமானனும் ஆக எட்டுருக்கொள் மூர்த்தியாகி, ஊனம் இல் உருவம் ஆகி கேடில்லாத குற்றமில்லாதவடிவம் ஆகி, உயிர்க்கு உயிராய் நின்ற ஞான நாயகமே ஏ - பசுகட்கெல்லாம் பதியாகி மிளிருதலைச் செய்யும் ஞானத் தலைவரே, ஆனகம் முழங்கும் ஐயாற்று அண்ணல் ஏ - ஆனகம் என்னும் தேவ வாத்தியம் முழங்குதலையுடைய திருவையாற்றில் எழுந்தருளியுள்ள எம்தலைவரே!, நான் உன்னை உணர்ந்திடல் எவ்வாறு ஏ - ஏழையேன் தேவரீரை அறிந்து கொள்வது எப்படியோ? கூறியருளுக. (எ-று).

(கு - ரை) மாருதம், நாரம் என்பன வடமொழி, காற்று நீர் எனும் பொருள. ஊனம் - குறைபாடு. ஆனகம்-வாத்திய விசேடம். இறைவனுக்கு அட்டமூர்த்தியென்று ஒரு திருப்பெயர். அவையே ஐம்பெரும் பூதங்களும் இருசுடரும் இயமானனும் ஆம். உருவம் வடிவம். ரூபம் என்பதன் திரிபு என்பர். உயிர்கள் எண்ணிறந்தன. இறைவன் ஒருவனே யாவன். முழங்கல் - ஒலித்தல். நாயகம் - தலைமையாயிருப்பவர். நான் என்பது தற்போதம் இழந்த நிலையில் கூறுவதாம். அவன் அருளே கண்ணாகக் காணல் வேண்டுமென்பதாம். ஞானம் - ஈறில்லா ஞானம், (வாலறிவன் என்பதுபோல).

எவ்வாறு - எந்தவகை. அவ்வகையினைத் தேவரீரே அறிவுறுத்தியருளல் வேண்டுமென்பது. ஏகாரம் - அசைநிலை.

65 எவ்வமாம் பவத்தி லாழ்ந்த ஏழையேன் பிழைகள் [தீர்த்துச்
செவ்விதா முனது செம்பொற் சேவடி சேர்த்தி டாயேல்
அவ்விய மனத்தி னேனை யாதரிப் பவரா ரார்க்கு(ம்)
நவ்விவாழ் கரத்தோய் பஞ்சநதிவளர் முக்க ணனே.

சொ - ள். ஆர்க்கும் - ஒலிக்கின்ற, நவ்விவாழ் கரத்தோய் - மானை ஏந்திய திருக்கையினை யுடையவரே! பஞ்சநதி முக்கணனே - திருவையாற்றில் எழுந்தருளியுள்ள திரிநேத்திரமுடையவரே! எவ்வம் ஆம் பவத்தில் ஆழ்ந்த - துன்பமாகிய பிறப்பினிடை அமிழ்ந்தின, ஏழையேன் - அறிவிலியது, பிழைகள் தீர்த்து - அறிந்தும் அறியாமலும் ஆற்றிய குற்றங்களனைத்தையும் போக்கி, செவ்விது ஆம் உனது செம்பொன் சேவடி - அழகிது ஆகிய தேவரீருடைய செம்பொன்மயமாகிய செம்மையாம் திருவடிகளில், சேர்த்திடாயேல் - சேர்த்தருளாதிருப்பிரேயாகில், அவ்வியம் மனத்தினேனை - அழுக்காறுற்ற அகமுடையவனை, ஆதரிப்பவர் ஆர் - அன்புகாட்டி யணைத்திடுவார் யாவரேயோ? ஒருவருமிலர் (என்பதாம்). ஏனைத்தேவர் பிறப்பு இறப்புடையவர். தேவரீரோ அவ்விரண்டுமற்றவர். ஆகையால் நீரே ஆதரிக்கவேண்டுமென விண்ணப்பித்ததாயிற்று. (எ - று).

(கு - ரை) நவ்வி - மான்கன்று. எவ்வம் - துன்பம். பவம்; தீர்த்தல் - விடுத்தல். "தீர்த்தலும் விடற் பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம். அவ்வியம் - அழுக்காறு (ஔவியம்); "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான், கேடும் நினைக்கப்படும்" என்பது திருக்குறள். ஆதரித்தல் - அன்பு செய்தல் (பற்றுதல்) பிழை - தவறு. செவ்வியது - அழகியது; செம்பொற்சோதீயிசர் சேவடி என்பார் செம்பொற் சேவடி என்றார். சேவடி - நற்றாள். ஆர்த்தல் - ஒலித்தல். இறைவன் திருக்கரத்தில் ஏந்திய மான் தாருகவனத்தில் இருடிகள் செய்த கொலைவேள்வியில் (ஆபிசார வேள்வியில்) தோன்றிய மான். இதன்பின் முயலகன் புலிமுதலிய வந்தனவாம். திரிசூலி, திரிநேத்திரன் முதலியன வடமொழி. சோம சூரியாக் கினிலோசனன் என்பதனை முக்கணனென்றார். ஏகாரம் ஈற்றசை.

66 முக்கண் நாயகவை யாற்று முதல்வனே சிறியே னுய்யத்
தக்கநின் னருளொன் றீந்தால் தமியே ன்
வினை யும் பொய்யும்
துக்கமு மடமு நீங்கித் துணையடித் தொழும்பு செய்யும்
மிக்கபே ரறிவும் வீடும் மேவுவல் எம்பிரானே.

சொ - ள். முக்கண் நாயக - சோமன், சூரியன், தீ யெனும் முச்சுடர்களையும் மூன்று கண்களாகக் கொண்ட தலைவரே! எம்பிரான் ஏ - எம்முடைய நாயகரே, ஐயாற்று முதல்வன் - திருவையாற்றுக் கோயிலில் எல்லாக் கடவுளர்க்கும் மூலகாரண மானவரே! சிறியேன் - அறிவிற் சிறியவனாகிய ஏழையேன், உய்ய - கடைத்தேற (பிழைத்து). தக்க நின் அருள் ஒன்று ஈந்தால் - தகுதியாகிய தேவரீருடைய திருவருள் சிறிது அளித் தருளின், தமியேன்-பற்றுக்கோடில்லாத தனியனேன், வினையும்- இரு வினைகளும். பொய்யும் துக்கமும் மடமும் நீங்கி-பொய்மை யும் துயரும் அறியாமையும் நீங்கப்பெற்று. (அதனால்) துணை - அடி தொழும்பு செய்யும் மிக்க பேர் அறிவும் - இணையடிகட்குத் தொண்டு பூண்டொழுகும் மிக்க பெருமையாகிய சிவஞானமும். வீடும் - அதுவழியாக முத்தியின்பினையும். மேவுவல் - பொருந்து வன் (எ-று).

(கு - ரை) சிறியேன் - சிறுமையேன். உய்தல்-கடைத்தேறல்- ஈதல் - உயர்ந்தோர், தாழ்ந்தோர்க்கு வழங்குவது. தமித்தல். தனித்தல். வினை - இருவினைகள், ஆகாமிய சஞ்சித பிராரத்த வினைகள். மடம் - அறியாமை. தொழும்பு - வழியடிமை. "ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத் தேன்" என்பது திருவாசகம். மிக்கபேர் அறிவு - பரஞான மாகிய சிவஞானம். வீடு - சிவப்பேறாகிய பேரின்பம். மேவுவல் - பொருந்துவன்: தன்மை யொருமை வினை முற்று. பிரான் - தலைவன். இப்பாடல் அறுசீராசிரிய விருத்தம்.

67 எம்பிரான் நினது செம்பொன் இணையடி மறந்துகூர்வேல்
அம்பக மகளிர் கொம்மை யம்முலை ஞெமுங்கப் புல்லி
வெம்பிய வுளத்து நாயேன் தெருளுநா ளுளதோ !
[மென்பூங்
கொம்பரிற் குரகங் கிள்ளைக் குரன்மிகை யாற்றெம்
[மானே.

சொ - ள். மெல் பூ கொம்பரின் குரகம் கிள்ளை குரல் மிகு ஐயாற்று எம்மான் ஏ - மெல்லிய பூக்களையுடைய கிளைகளிடத்து

நாகணவாய்ப் பறவைகளும், கிளிகளும் ஆகிய கூட்டங்களின் இனிய குரல் ஒலி மிக்க திருவையாற்று. எம்மான் செப்பொன் இணை அடி மறந்து கூர்வேல் அம்பகம் - எம் நாயகரே; தேவரீருடைய செப்பொன் மயமாகிய இரு திருவடிகளையும் மறந்துவிட்டு, கூரிய வேல்போன்ற கண்களையுடைய, மகளிர் - இளமகளிருடைய, கொம்மை - திரண்ட, அம்முலை நெருங்க புல்லி - கொங்கைகள் நெருங்கப்புணர்ந்து (அழுந்தக் கூடி) வெம்பிய - அதனால் வாடிய, நாயேன் - நாயினுங் கடைப்பட்டவனாகிய எளியேன், உளத்து நாயேன் - மனமுடைய நாயினேன், தெருளும் நாள் உளது ஓ - தெளிவு அடைந்து மயக்கம் நீங்கி திருவடிக் காட்சி காணும் காலமானது உளதாகுங் கொல்லோ? இதனை யருளிச் செய்வீராக. (எ - று).

(கு - ரை) அம்பகம் - கண். கொம்மை - அழகு. நெருங்கல் - இறுகத்தழுவல். வெம்பிய - வாடிய. தெருளல் - தெளிதல். கொப்பு - கொம்பர் என்றுமாயிற்று. குரகம் - நாகண வாய்ப்புள். கிள்ளை - கிளி, நாகணவாய்ப்புள் - திருத்தமாகப் பேசும். கிளி - "கொஞ்சிக் கொஞ்சிப் பேசும். கொஞ்சு கிளியன்ன மொரு குமுத இதழ்" என்பது பாரதம். நாள் - பக்குவமுற்ற காலம். வெம்பிய உளம் - வாடிய மனம். உள்ளம் உளமெனவாயிற்று. உள்ளுதலில் உள்ள மென்றுமாயிற்று. எம்மான் - எமது தலைவன்.

(தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்.

சீர்காழி அருள்மிகு சட்டைநாதசுவாமி திருக்கோயில் கண்டு இன்று ஆனந்தமடைந்தேன். பல்லாண்டுகளாக நான் கண்ட ஆசை இன்று நிரம்பியது. இங்கு நிர்வாகிகள் திருக்கோயிலைச் சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்துள்ளார்கள்.

(ஓ-ம்) தலைவர், அறங்காவலர் குழு,
பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில்

22—6—73.

சிறுகதை :

# துறவிலும் துறவு

வாகீசகலாநிதி, செந்தமிழ்ச்செல்வர்

**திரு. கி. வா. ஜகந்நாதன், M. A.**

இந்தப் புதுச் சாமியார் வந்தாலும் வந்தார்; இந்த இடத்துக்குத் தனிக் களை ஏற்பட்டு விட்டது. அடேயப்பா! எத்தனை ஜனங்கள்! என்ன கூட்டம்; இதற்கு முன் இங்கே ஈ காக்கை வரக்கூட யோசனை பண்ணுமே! பெரிய சாமியார் லேசிலே ஆளை உள்ளே விடுவாரா?

"பெரிய சாமியாருக்கு எத்தனையோ சீடப் பிள்ளைகள் வந்தார்கள். ஆனால், இந்தச் சாமியாரைப்போலக் கெட்டிக்காரர் யாரும் இல்லை. நம் சங்கரானந்தர் இருக்கிறாரே; அவர் நன்றாக உழைப்பார். குழந்தையிலிருந்தே இந்த ஆசிரமத்துக்கு வந்து இப்போது சாமியாராகி விட்டார். பெரிய சாமியாருக்கு வேண்டியது இன்னது என்று அவருக்குத் தெரிந்தது போல யாருக்கும் தெரியாது. ஆனாலும் பெரியவருடைய மகிமையை இப்போது எல்லாரும் தெரிந்து கொண்டதுபோல முன்னாலே இல்லை. இந்தப் புதுச் சாமியார் நிர்மலானந்தர் செய்கிறது கெட்டிக்காரத் தனமாகத்தான் இருக்கிறது."

"பாரேன், முன்னே எல்லாம் ஜயந்தி என்று நடக்கும். யாரோ இரண்டு மூன்று பேர் எங்கேயிருந்தோ வந்துவிட்டுப் போவார்கள். யாரோ ஒரு பணக்கார பிராமணர் சேலத்திலிருந்து காரில் வருவார்; அபிஷேகமோ, பூசையோ செய்து கொண்டு சாயந்தரமே போய்விடுவார். அவ்வளவுதான். இப்போது எத்தனை கார்கள்! எத்தனை வாத்தியம்; வேத கோஷம் ஒரு பக்கம்; தேவாரம் ஒரு பக்கம்; பிரசங்கம் ஒரு பக்கம்."

"அதெல்லாம் இருக்கட்டும்; சாப்பாட்டைச் சொல். எத்தனை பேருக்குச் சாப்பாடு! இதற்கு முன் சாமியாரை ஏனென்று எட்டிப் பார்க்காத இந்த ஊர்ப் பணக்காரர்கள்,

இப்போது இங்கேயே பாளையம் போட்டு விட்டார்கள். சாப்பாட்டு ருசி, பாட்டு ருசி இரண்டும் அவர்களை அப்படி ஆக்கி விட்டன."

பொதுமக்களின் விமரிசனத்துக்குப் பாத்திரமான இடம், சேந்தமங்கலம் என்ற ஊருக்கு மேற்கே உள்ள சிறு குன்று. அதற்குத் தத்தகிரி என்று பெயர். அதில் ஒரு குகை. அதில் ஒரு துறவி இருந்து வந்தார். தண்ணீரில்லாக் காடாகிய அந்தப் பகுதியில் அவருடைய ஆசிரமத்தில் உள்ள கிணற்றில் மாத்திரம் எப்போதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கும். ஊருக்கும் அந்த இடத்துக்கும் ஒரு மைல் துறவி, பழுத்த ஞானி. சுயம்பிரகாசர் என்பது அவர் திருநாமம். அவர் எங்கும் வெளியே வருகிறதில்லை.

அந்த ஊருக்கு அவர் வந்த புதிதில் அவரிடம் ஊர்க்காரரில் சிலர் ஈடுபட்டார்கள். ஏதோ சில நிலம் அந்தக் குகாசிரமத்துக்கு எழுதி வைத்தார்கள் அதைப் பராமரிக்கச் சில தர்ம கர்த்தர்கள் இருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது சுவாமிகளுக்கு வேண்டியதைச் செய்து வந்தார்கள் யாரோ ஒரு சமையல்காரனைப் போட்டு, அவனுக்கு ஒருவேளை பிட்சை பண்ணிப் போட வழி செய்திருந்தார்கள்.

சுவாமிகளைப் பார்க்க எங்கெங்கிருந்தோ ஜனங்கள் வருவார்கள்; பாதி நாள், வருகிறவர்களைச் சுவாமிகள் பார்க்காமலே அனுப்பி விடுவார்; "இங்கே என்ன வேலை? எங்காவது கோயில் குளத்துக்குப் போகச்சொல்" என்று சொல்லி அனுப்பிவிடுவார்.

அவரிடம் சங்கரானந்தர் வந்து சேர்ந்தார் இளம் பிள்ளையாக, பிரமசாரியாக வந்தபோது சீடராக வரவில்லை. சுவாமிக்குச் சமையல் பண்ணிப் பிட்சை போடத்தான் அவரை அமர்த்தினார்கள். அவருடைய பாக்கியம், நாளடைவில் சுவாமிகளுடைய அருட்பார்வை அவர்மேல் விழுந்தது. சாஸ்திரங்களைப் படித்துக்கொண்டார்; உபதேசம் பெற்றார். துறவியாகி விட்டார் இப்போது வேறு ஒரு சமையல்காரன் வந்துவிட்டான்

சுவாமிகளிடம் சங்கரானந்தர் வந்த பிறகு, சுவாமிகளைப் பார்க்க வருகிறவர்களுக்கு ஒரு சௌகரியம் கிடைத்தது. அவர் மூலமாகச் சுயம்பிரகாச சுவாமிகளைப் பார்க்க முயல்வார்கள். சுவாமிகளுக்கு யாரையும் பார்க்க விருப்பமில்லாவிட்டால், வந்தவர்களை ஒரு நாள் இரண்டு நாள் இருக்கச் சொல்வார் சீடர்.

குருநாதரிடம் இங்கிதமாகப் பேசிக் கருணை சுரக்கச் செய்து, அவர்களுக்குத் தரிசனம் செய்து வைப்பார்.

நாளாக ஆக, வேறு சிலரும் சுவாமிகளுக்குச் சீடர்கள் ஆனார்கள். ஓரிருவர் அவருடன் தங்கினார்கள். மற்றவர்கள் உபதேசம் வாங்கிக்கொண்டு வெவ்வேறு ஊர்களில் இருந்தார்கள். தத்தாத்திரேய ஜயந்தி நடக்கும்போது ஆண்டுக்கு ஒரு முறை தரிசனம் செய்துகொண்டு போவார்கள். உடன் இருந்தவர்களில் சங்கரானந்தரைத் தவிர, மற்றவர்களெல்லாம் சேந்தமங்கலத்துக்குள் சென்று பிட்சை வாங்கிச் சாப்பிட்டார்கள். சுவாமிகளுக்குப் பிட்சை ஆன பின்பு எஞ்சினதைச் சங்கரானந்தர் உண்டுவந்தார்.

இப்படி நடந்துகொண்டு வரும்போதுதான் நிர்மலானந்தர் வந்தார். அவர் இங்கே வரும்போது நிர்மலானந்தராகவில்லை; குப்புசாமியாக இருந்தார். கன்னியாகுமரிக்கு அருகில் பிறந்தவர் அவர். நன்றாக வாசித்தவர். வடமொழியில் நிபுணர். வேதாந்த நூல்களைக் கற்றவர். கொஞ்ச நாள் காந்தீய வாதிகளுடன் திரிந்தவர். அரசியல் விஷயத்தில் அவருக்குக் கொஞ்சம் நாட்டம் இருந்தது. குடும்பத்தோடு வாழ்ந்துவந்தார். இளம் பிராயந்தான். ஆனாலும் வைராக்கியம் பிறந்து சட்டி சுட்டது கை விட்டதென்றபடி குடும்பத்தைத் துறந்து வந்துவிட்டார். நல்ல குருநாதன் எங்கே இருக்கிறான் என்று தேடிக்கொண்டு ஊரூராக அலைந்தார்; எந்த எந்தச் சாமியாரையோ பார்த்தார். எங்கேயும் அவர் மனம் மேவவில்லை. வெறும் சாஸ்திரப் பித்தர்களையும், அறியாமையை மௌனத்தால் மறைப்பவர்களையும், வாசாலகர்களையும், மக்களைக் கையில் போட்டுக்கொண்டு படாடோபம் பண்ணுகிறவர்களையும், சித்தென்றும் அற்புதமென்றும் சொல்லி ஏமாற்றுபவர்களையும் கண்டுகண்டு அலுத்துப்போனார்.

கடைசியில் இங்கே வந்தார். குணகுணிபாவம் என்று சொல்வார்கள்; அப்படி இந்தச் சுவாமிகளிடம் அவர் உபதேசம் பெற வேண்டுமென்று கடவுள் விதித்திருக்கும்போது, அது தப்புமா? வந்து தரிசித்தபோதே, சுவாமிகளுடைய வைராக்கியம் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. முகத்திலும் கண்ணிலும் இருந்த ஒளியைக் கண்டு அடிமையாகி விட்டார். நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழுந்து அழுது, "என்னைக் கரையேற்ற வேண்டும்" என்றார்.

சுவாமிகள், "குடும்பத்தில் வாழ்ந்த உனக்குச் சபல சித்தம் போய்விட்டதா?" என்று கேட்டார்.

"போய்விட்டதாகவே நினைக்கிறேன், குருநாதருடைய திருவருள் இருந்தால், இந்தப்பாவி உய்ந்துவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது"

"அப்படியானால் உன்னைச் சோதிக்கலாமா ?"

"தேவரீருடைய திருவுள்ளம்."

"உனக்குச் சரீராபிமானம் இல்லையென்றால், எங்கே உன் ஆடையை அவிழ்த்து எறி, பார்க்கலாம்" என்றுஉத்தரவிட்டார் சுவாமிகள்.

என்ன ஆச்சரியம்! வந்தவர் சிறிதும் யோசிக்காமல் உடனே மேல் துணடை வீசி எறிந்தார்: அரையில் இருந்த ஆடையையும் அவிழ்த்து எறிந்துவிட்டுக் குழந்தைபோல் நின்றார்.

அதற்குமேல் குருநாதர் தாமதம் செய்யவில்லை: உடனே ஒரு காவி ஆடையை எடுத்து, அவர்கையில்கொடுத்துவிட்டார். அதுமுதல் அந்தக் குகாசிரமத்தில் நிர்மலானந்தர் என்ற தீட்சா நாமத்துடன் அவர் இருக்கலானார்.

வந்து ஒருவருஷம் ஆயிற்று. நிர்மலானந்தர் ஊருக்குள் போய்வந்தார் அவருக்கு ஒருவருத்தம், உலகத்தில் எங்கும் காணக்கிடைக்காத இந்த மகாஞானியைச் சரியாக உலகம் பயன் படுத்திக்கொள்ள வில்லையே என்ற எண்ணம். இதை அடிக்கடி சங்கரானந்தரிடம் வெளியிட்டு வருவார்.

ஒரு நாள் பெரிய சுவாமிகளிடமே சொல்லத் தொடங்கினர்: "தாயுமானவர் சொன்னமாதிரி அகண்டாகாரமான சிவபோகம் இங்கே ஏகஉருவாய்க் கிடக்கிறது; ஜகத்தவர் வாராமல் வீணே மாய்கிறார்கள்" என்றார்.

"உலகம் முழுவதும் ஞானம் அடைந்துவிட முடியுமா? கடவுளுடைய மாயா லீலை கண் இருந்தும் குருடர்களாக வைத்திருக்கிறது."

"பேசாத சாமிக்குக் கோயில் கட்டிப் பூஜையும் உற்சவமும் செய்கிற மனிதர்கள், பேசும் சாமி இங்கே இருப்பதைச் சிறிதும் அறிய வில்லையே!" என்றார் சீடர்.

'அறியவேண்டியவர்களே அறிவார்கள். நீ இங்கே எப்படி வந்தாய்?

"என்னைப்போல மற்றவர்களும் வந்து நன்மையை அடைய வேண்டாமா?"

"அதைப்பற்றிய கவலை நமக்கு எதற்கு? அது பகவான் படவேண்டிய கவலை."

இந்தச் சமாதானம் நிர்மலானந்தருக்குச் சரியாகப்படவில்லை; 'சுவாமிகள் அப்படித்தான் சொல்வார். நாம் ஜனங்களுக்குக் குருநாதருடைய அருள் பயன்படும்படி செய்யவேண்டும்' என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் உதித்தது.

சுவாமிகளிடம் விடைபெற்றுச் சில இடங்களுக்கு யாத்திரை போனார். அங்கங்கே உள்ளவர்கள் அவருடைய தேசிலும் அறிவிலும் பேச்சிலும் மயங்கி வழிபட்டார்கள். அவர்களுக்கெல்லாம் தம்முடைய குருநாதருடைய பெருமையை எடுத்துச் சொல்லி, அவரைத் தரிசித்துக் கொள்ளும்படி சொன்னார்.

வருகிறவர்கள் கூட்டம் அதிகமாயிற்று வந்தவர்களிற் சிலர் தம்முடன் சமையல்காரரை அழைத்து வந்து ஆசிரமத்து மடைப்பள்ளியிலே சமையல் செய்வித்துச் சாப்பிட்டார்கள். சிலர் சாமான்களை வாங்கிப் போட்டு, ஆசிரமத்துச் சமையல்காரனையே சமைக்கச் சொன்னார்கள். இந்த ஏற்பாடுகளில் நிர்மலானந்தர் ஈடுபட்டு, வருகிறவர்களுக்குச் சௌகரியங்களைச் செய்துகொடுத்தார் வருகிறவர்கள் அதிகமாகவேண்டும் என்று அவர் ஆசை. அதனால் அவர்களுக்கு உணவு விஷயத்தில் சிரமம் இருக்கக் கூடாது என்று இப்படியெல்லாம் செய்தார்.

சுவாமிகளுக்குக் கூட்டம் சேர்வது பிடிக்கவில்லை. "குடும்பியாயிருந்தவனை உள்ளே விட்டது பிசகு" என்று அடிக்கடி சொன்னார்; "நீ அரசியலில் ஈடுபட்டு வியாபகம் அடைய எண்ணினவன். இங்கே வந்தும் உனக்கு வியாபக ஆசை போகவில்லை" என்றார்.

"அவ்விடத்தில் அப்படி உத்தரவாகக் கூடாது. இதில் அடியேனுக்கு லாபம் ஒன்றும் இல்லையே! ஜனங்கள் நல்ல வழியிலே போகவேண்டும் என்பதுதானே மகாத்மாக்களுடைய ஆசை? அதை எண்ணியே வருகிறவர்களை வா என்று சொல்கிறேன்."

"சரி, சரி; இதுவும் ஒரு பெரிய குடும்பமாகப் போகிறது!" என்று அலுத்துக் கொள்வார் சுவாமிகள்.

"பகவானே பகு குடும்பி என்று சொல்லும்போது, அவ்விடத்தில் அவ்வாறு இருப்பதுதானே தர்மம்?"

"ஓஹோ, எனக்கே உபதேசம் செய்ய வந்து விட்டாயா?" என்று சொல்லிப் புன்னகை பூப்பார் சுவாமிகள்.

2

சுவாமிகள் கூட்டத்துக்கு அணைபோட ஒரு காரியம் செய்தார். இப்போதெல்லாம் பணம் நிறைய வந்தது. அதன் கணக்கு வழக்கெல்லாம் நிர்மலானந்தர் பொறுப்பில் இருந்தது. ஆண்டுதோறும் நடைபெறும் தத்தாத்திரேய ஜயந்தியில் பெருங் கூட்டம் கூடியது. தட்ட முடியாமல் எல்லோருக்கும் சுவாமிகள் தரிசனம் கொடுத்து வந்தார். அவருக்கு அதில் வெறுப்புத்தான். ஆனாலும் என்ன செய்வது?

கடைசியில் அந்தத் தந்திரம் செய்தார். அந்தச் சிறிய குன்றின் உச்சியில் தத்தாத்திரேயர் ஆலயம் ஒன்றை அமைக்கும்படி நிர்மலானந்தரிடம் சொன்னார். அதைக் கேட்டபோது சீடருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. தம் கட்சி வென்றது என்று கிளுகிளுத்தார். உடனே ஊர்ப் பிரயாணம் தொடங்கிவிட்டார். ஆறே மாதத்தில் பணம் குவிந்துவிட்டது. பிரம்மாண்டமான ஆலயம் நிர்மாணமாகியது.

சுவாமிகளுக்கு வருகிறவர்களைத் தத்தாத்திரேயர் கோயிலுக்குத் திருப்பி விட்டுத் தாம் தனியாக இருக்கலாம் என்பது எண்ணம். கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் ஆயிற்று. அதற்குப் பின் சுயம்பிரகாச சுவாமிகள் மௌனத்தில் ஆழ்ந்தார். "வருகிறவர்கள் மேலே உள்ள தத்தாத்திரேயர் ஆலயத்தைப் பார்த்துப் போனால் போதும்; இங்கே வரவேண்டாம்" என்று உத்தரவிட்டு விட்டார். அந்த உத்தரவுப்படி சங்கரானந்தர் யாரையும் குகைக்குள்ளே விடுவதில்லை.

நிர்மலானந்தருக்கு, 'சுவாமிகள் பேசாமல் மௌனமாகத் தானே இருக்கிறார்? அவரை எட்ட நின்றபடியே தரிசித்தால் என்ன?' என்று நினைப்பு.

சங்கரானந்தர், "அதெல்லாம் நமக்குத் தெரியாது. சுவாமிகள் உத்தரவு அது" என்பார்.

நிர்மலானந்தர் "சுவாமிகளுக்கும் தொந்தரவு இல்லாமல்; வருகிறவர்களுக்கும் ஏமாற்றம் இல்லாமல், ஒரு வழிசெய்யலாம் அதோ அந்த ஜன்னலைத் திறந்துவைத்துவிடலாம். அதன் வழியே தூர இருந்து, நம் குருநாதரைத் தரிசித்துக்கொண்டு

போய்விடட்டும்" என்று சொன்னார்; "வாசல் கதவைத்தானே திறக்கக்கூடாது? ஜன்னலைத் திறந்தால் என்ன?" என்று சமாதானம் சொன்னார். சங்கரானந்தர் அதற்கு இசைந்தார்.

தரிசனத்துக்கு வந்தவர்களில் கோயிலுக்கு ஆயிரக்கணக்கில் கொடுத்த சில செல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் சுவாமிகளுக்கு முன்னே விழுந்து நமஸ்காரம் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். நிர்மலானந்தர் சுவாமிகளிடமே கெஞ்சிப் பிரார்த்தித்து, அவர்களுடைய ஆசையை நிறைவேற்றினார்.

தத்தாத்திரேய ஜயந்தியன்று மகா தீபாராதனை மேலே ஆகும்போது, சுவாமிகள் எழுந்தருளி எல்லோருக்கும் தரிசனம் தரவேண்டுமென்று நிர்மலானந்தர் வேண்டிக்கொண்டார். சுவாமிகள் இணங்கினார். மற்ற நாட்களில் அவர் வெளியில் வருகிறதே இல்லை. ஆனாலும், பணக்காரர்களை நிர்மலானந்தர் உள்ளே கூட்டிக்கொண்டுபோய்த் தரிசனம் செய்து வைத்தார். அருட்பசியுள்ளவர்களைச் சங்கரானந்தர் அழைத்துச் சென்றார்.

தத்தாத்திரேய ஜயந்தி வரவரப் பெரிய திருவிழா ஆகிவிட்டது. குன்றைச் சுற்றிலும் கொட்டகைகள். ஊருக்குள் உற்சவர் எழுந்தருளினர்; வாத்தியக்கச்சேரி நடைபெற்றது. குன்றின் அடிவாரத்தில் வடமொழி வித்துவான்கள் வந்து, அத்வைத சபை நடத்தினார்கள். தமிழ்ப்புலவர் வந்து சொற்பொழிவாற்றினார்கள் தத்தாத்திரேயருக்கு அபிஷேக ஆராதனைகள் அமோகமாக நடந்தன. வேதம்வல்ல விற்பன்னர்கள் பலர் வந்து வேதத்தையும் உபநிஷத்தையும் பாராயணம் செய்தார்கள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடினார்கள். அவ்வளவு பேருக்கும் சாப்பாடு கிடைத்தது.

தத்தாத்திரேயமூர்த்திக்கு இரண்டு பூஜகர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் சேந்தமங்கலத்தில் வசித்தார்கள்; வந்து பூஜை செய்து சென்றார்கள். சுவாமிகள் பிட்சைக்கு ஒருவர், தத்தாத்ரேயர் கோயிலுக்கு ஒருவராகப் பரிசாரகர்கள் இருவரை நியமித்தார்கள் இவர்களுக்குச் சம்பளத்துக்காக நிதி திரட்டி, அதைத்துண்டாக ஒருவரிடம் கொடுத்து வைத்தார் நிர்மலானந்தர்.

நிர்மலானந்தர் மற்றொரு காரியம் செய்தார். சுவாமிகளுடைய சரித்திரத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விரிவாக எழுதச் செய்து, ஐயாயிரம் பிரதிகள் அச்சிட்டுப் போகிற இடங்களிலெல்லாம் விநியோகித்தார் சுவாமிகள் படத்தை லட்சம் பிரதிகள் போட்டு எங்கும் பரப்பினர் தமிழ் நாட்டிலும் பிற நாட்டிலும் சுவாமிகள் புகழும் நிர்மலானந்தர் புகழும் ஓங்கின.

(தொடரும்)

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம்
சிவஸ்ரீ. S சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 32. இதழ் 7. பக்கம் 348 இன் தொடர்ச்சி)

दारुदर्भैश्च लोहैश्च पाद्हस्तानि कल्पिते ।
कृत्तिमालंकृतादीनि देवदेहेषु योजिते ॥
नृपचक्र प्रभूणां च कुब्जत्वं संभविष्यति ।
तद्दोष शयनार्थाय शान्ति संप्रोक्षणं कुरु ॥

— भीमसंहिता

தர்ப்பம், கட்டை, லோகங்களினுல் ஒட்டுக்கால்கள் வைத்து கிருத்திரமமான அலங்காரங்கள் தேவசரீரத்தில் செய்யப்படுமானுல் அரசன், ராஜ்யம், பிரபுக்கள் எல்லோருக்கும் குட்டையாகப் பிறக்கும் தோஷமுண்டாகும். அந்த தோஷ நிவர்த்தியின் பொருட்டு சாந்தி சம்புரோக்ஷணம் செய்ய வேண்டும்.

विष्णुरश्चव रूपंत शिवदेहे प्रकल्पिने ।
राष्ट्रेनश्यनि कल्याणं महामारी प्रवर्तते ॥
तत्तत्काले विशेषेण तत्तद्दोष निवारणे ।
दोषाणां शमनार्थाय स्नानार्थे स्नपनं परम् ॥

— वीरतन्त्रम्

விஷ்ணுருபமானது சிவதேஹத்தில் கற்பிக்கப்படுமாயில் ராஜ்யத்தில் மங்களத்தை நாசம் செய்யும். மஹாமாரீ உண்டாகும், ஆதலால் அவ்வப்போதே தோஷ நிவர்த்தியின் பொருட்டு, ஸ்னபனம் வைத்து அபிஷேகம செய்யவேண்டும்

देवे विकल्पितं रूपं अलंकृत्य विरोधतः ।
तद्रूप दर्शनं कृत्वा भार्यपुत्राऽर्थनाशनम् ॥

— वचनरत्नावलि

ஈச்வரரிடத்தில் மாறுதலான ரூபத்தை அலங்கரித்தும் அதைத்தரிசித்தும் உள்ளவர்களுக்கு, மனைவி, மக்கள், பொருள் இவைகளின் அழிவு உண்டாகும். — வசனரத்னவளி.

இதுபோல் பல விதி காணப்படுவதால் கிருத்திரிமாலங்காரம் கூடாது. — ஸ்வமதம்.

வாஹனக்ரமம். காரணாகமப்படி. சுவாமிக்கு:

| | | |
|---|---|---|
| 1வது திருநாள் | பல்லக்கு | ஹம்ஸம் |
| 2 ,, ,, | சூரியப்ரபை | சந்திரப்ரபை |
| 3 ,, ,, | சிம்மம் | பூதம் |
| 4 ,, ,, | நாகம் | மகரம் |
| 5 ,, ,, | பல்லக்கு | விருஷபம் |
| 6 ,, ,, | கேடயம் | யானை |
| 7 ,, ,, | ரதம் | மயில் |
| 8 ,, ,, | புருஷாமிருகம் | குதிரை |
| 9 ,, ,, | பீடம் | புலிவாகனம் |
| | நடேச உற்சவம், கிருஷ்ணகந்தம் | |
| 10 ,, | கைலாச வாஹனம். | |

தேவி உற்சவத்தில் வாஹனக்ரமம்

| | | |
|---|---|---|
| 1வது திருநாள் காலை மாலை | பத்ரபீடம் | பத்ரபீடம் |
| 2 ,, ,, | குதிரை | கிளி |
| 3 ,, ,, | கட்டில் | புஷ்பப்ரபை |
| 4 ,, ,, | மகரம் | பீமன் |
| 5 ,, ,, | கல்யாணம் | விருஷபம் |
| 6 ,, ,, | கேடயம் | யானை |
| 7 ,, ,, | ரதம் | மயில் |
| 8 ,, ,, | பல்லக்கு | விமானம் |
| 9 ,, ,, | பாம்பு | சிம்மம் |
| 10 ,, | பத்ரபீடம் | ஹம்சம் |
| 11 ,, | தீர்த்தம் | அவரோஹணம் |

விநாயகருக்கு வாஹனக்ரமம் — சிந்தியம்.

| | |
|---|---|
| 1வது திருநாள் | மூஷிகம் |
| 2 ,, ,, | மயில் |

| | | |
|---|---|---|
| 3 ,, | ,, | பூதம் |
| 4 ,, | ,, | விருஷபம் |
| 5 ,, | ,, | சத்தி ரதம் |
| 6 ,, | ,, | யானை |
| 7 ,, | ,, | ரதம் |
| 8 ,, | ,, | மிருகயாத்ரை (குதிரை) |
| 9 ,, | ,, | நடேச உற்சவம் (கேடயம்) |
| 10 | ,, | தீர்த்தம் |

சுப்பிரமண்யருக்கு - குமாரதந்திரம்

| | | | |
|---|---|---|---|
| 1வது திருநாள் | | பத்ரபீடம் | ஹம்சம் |
| 2 ,, | ,, | கோழி | ஆடு |
| 3 ,, | ,, | சூர்யப்ரபை | மயில் |
| 4 ,, | ,, | நாகம் | சந்திரப்ரபை |
| 5 ,, | ,, | மகரம் | புலி |
| 6 ,, | ,, | மூடுபல்லக்கு | யானை |
| 7 ,, | ,, | ரதம் | ரதம் |
| 8 ,, | ,, | புருஷாமிருகம் | குதிரை |
| 9 ,, | ,, | பல்லக்கு | சிம்மம |
| 10 | ,, | கட்டில் | ராவணன் |

இவ்வாறு வாகனங்கள் வைக்கவும்

மகோத்ஸவ ஆரம்பத்திற்கு முன் மண்டபம், கோபுரம், விமானம், வீதிகள், வீடுகள், தீர்த்தமண்டபம், விச்ராந்தி மண்டபம்யாவும்புல்பூண்டுமுதலியவைகளை நீக்கிசுதாலேபனம் முதலியன செய்து மாவிலை, தோரணங்கள், வாழை, பாக்கு, கரும்பு முதலியவைகளால் நன்ருகப் பந்தல் முதலியவைகளை அலங்கரித்து ஜலம தெளித்து புஷ்பமாலைகள் கட்டி ஆங் காங்கும் பூர்ணகும்பம் முதலியன வைத்து அநேக தீபங்க ளுடன் அலங்காரம் செய்திருக்கவேண்டும்.

இதுபோல் வாஹனங்கள் பல்லக்குகள் முதலானவை களையும் புதுப்பித்து அலங்காரம் செய்யவேண்டும்.

டக்கா, படஹம், பேரி, சல்லரி, சங்கம், காஹனம், மத்தளம், நர்த்தனம், கீதம், வாத்யம் முதலியவைகளுடன் பஞ்சமுகவாத்யம் முதலிய அநேக வாத்தியங்களுடன், கழி நுணியிற் சுற்றப்பட்ட அநேகம் தீவட்டிகளுடன், வீதிப்ரம ணம் செய்யவேண்டும்

நான்குவேத பாராயணத்துடன் அந்தணர்களுடன் வாஹன முறைப்படி செய்ய செல்லவேண்டும் ஆசாரியன் தென்புறத்திலும் அரசர்கள் வலப்புறத்திலும் செல்லவேண்டும், ருத்ர கன்னிகைகள் சுவாமியின் எதிரில் விசேஷ வாத்யங்களுடன் செல்லவேண்டும். முன்பே பேரீபடஹ வாத்யம் முழங்க பத்ரகாளி உற்சவத்தைச் செய்யவேண்டும். மஹோற்சவ ஆரம்பத்திற்கு முதல்தினம் விநாயகருக்கு விசேஷமான மோதகம் முதலிய நிவேதனம் செய்து விமானத்தில் புறப்பாடு செய்வித்து வீதிப்ரமணம் செய்விக்கவேண்டும்.

வ்ருஷப வாஹனக் காக்ஷியன்று பலம் புஷ்பம் இவைகளால பூர்ணமாக இறைவனை அலங்கரித்து ஒவ்வொரு இடத்திலும் வேத கோஷங்களாலும் வீணை, குழல் முதலிய வாத்தியங்களாலும் சந்தோஷிக்கச் செய்து, ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்யவேண்டும்.

ஒன்பதாவது தினத்தில் இரவில் அல்லது 10வது தினத்தின் காலையில் நடேச உத்ஸவம் செய்து கோபுர வாயிலில், மட்டையடி தாசிகளைக் கொண்டு நடத்திவைக்கவேண்டும். இது துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தை அறிவிப்பதாகும்.

மஹோத்ஸவ விதி :

महेशयानकालेतु दर्शनंतु विशेषतः।
फलानि नालिकेरं च क्रमुकं लिकुचं तथा ॥
देवेश सन्निधि कृत्वा देवसंमुखमाचरेत् ।
फलं पूर्णफलं चैव देवो सन्तुष्टिमाचरेत् ॥
फलादौ छिन्न भिन्नं चेत् देवः क्रूरसमोभवेत ।
महेशः क्रूरभावश्चेत् जनानां रोगभीर्भवेत् ॥

மகேச்வரருடைய யான காலத்தில் தரிசனம் செய்வது மிகவும் விசேஷமாகும் வாழைப்பழம், தேங்காய், பாக்கு, வெற்றிலை எலிமிச்சம்பழம் முதலியவைகளை சுவாமிக்கு எதிராகக் காண்பித்து எடுத்துக்கொள்ளவேண்டும். நைவேத்யமாகச் செய்யக்கூடாது. மற்றும் அந்தப் பழம் முதலியவைகளை உடைத்துச் சேதம் செய்து தெரிசனம் செய்வித்தால் தேவர் கோபம் கொள்ளுவார். தேவர் கோபித்தால் ஜனங்களுக்கு வியாதி உண்டாகும். — வசனரத்னவளி

शूद्रस्पर्शनकालेतु नैवेद्यंतु नकारयेत् ।
नैवेद्यकरणं चेत्तु राजराष्ट्रे विनश्यति ॥ — वातुलं

சூத்திரனுடைய ஸ்பர்சன சம்பந்தமுள்ள காலத்தில் நைவேத்யம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் ராஜா, ராஷ்ரம் அழியும். — வாதுளாகமம்

**ரதாரோஹணம் :**

ஏழாவது திருநாளில் அல்லது ஒன்பதாவது திருநாளில் ரதாரோஹணம் செய்விக்கவேண்டும். சர லக்னத்தில் கிரஹ ப்ரீதி முதலியன் செய்துகொண்டு ரதாரோஹணம் செய்ய வேண்டும்.

டக்கை படஹம் முதலிய வாத்யங்களுடன் ரதப்ரமணம் செய்விக்கவேண்டும். ரதாரோஹண ப்ரமண காலத்தில் பழம் முதலியன அர்ப்பணம் செய்யவேண்டும். ரதாவரோஹணம் செய்து சண்டாளப் பிராயச்சித்தாபிஷேகம் செய்து மஹாஹவிர் நிவேதனம் செய்யவேண்டும்.

**தீர்த்தஸங்க்ரஹணம் :**

தீர்த்ததினத்திற்கு முதல்நாள் ப்ராசாதத்திற்கு முன்பு ஸ்தண்டிலம் போட்டு நவ கலசங்களை ஸ்தாபித்து அதன் நடுவில் மனோன்மனியையும் சுற்றிலும் கங்கை முதலிய சப்த தீர்த்தங்களையும் ஈசானத்தில் துர்க்கையையும் ஆவாஹனம் செய்து நிவேதனம் முதலிய உபசாரம் செய்யவேண்டும்.

**மிருகயாத்திரை:**

குதிரை வாஹனத்தில் கத்தி கேடயம் முதலிய எடுபிடிகளுடன் சுவாமி வீதிக்குச் சென்று வருதல்.

**சூர்ணோத்ஸவம் :**

10வது நாளில் உரல் உலக்கைகளுக்குப் பூஜை செய்து மஞ்சள் பொடி, எள் எண்ணெ விட்டு அங்குரம் போட்டு இடித்து சுவாமிக்குச் சாத்தி, யஜமான் முதலியவர்களுக்கும் கொடுக்க வேண்டும். முன் பூஜை செய்து வைக்கப்பட்ட கங்கை முதலிய தீர்த்த கலசத்துடன் நதிக்குச் சென்று அஸ்திரதேவர் முன்னிட்டு எல்லோரும் ஸ்னானம் செய்யவேண்டும்.

யாகசாலையில் பூஜிக்கப்பட்ட கும்பங்களை இறைவனுக்கு அபிஷேகம் செய்யவேண்டும். இரவு துவஜாவரோஹணமும்

மறுதினம் மௌனோத்ஸவம். அதற்கு மறுதினம் பக்தோத்ஸவம் செய்யத்தக்கது

कल्याणं देवकल्याणे कृतं चेत्तु विनश्यति ।
तस्मान्महोत्सवे सूत्रारोपणे स्थापनादिके ॥
कल्याणं वर्जयेद्धीमान् चूडोद्वाहादिकं स्वकम् ।

— कामिकागमम्

சுவாமியின் சுப காரியத்தில் செய்யும் மனிதனுடைய சுப காரியம் கெடுதலடையும். ஆகையால் பிரும்மோத்ஸவத்திலும் துவஜாரோஹணத்திலும் ஸ்தாபனம் முதலானதிலும் சௌளம் விவாஹம் முதலான மங்களகாரியங்கள் மனிதனால் நீக்கத்தக்கது. — காமிகாகமம்.

சிவாலயத்தில் துவஜாரோஹணம் செய்யப்பட்டால் மற்றவிடங்களில் துவஜாரோஹண உத்ஸவம் செய்யக்கூடாது.

ஈசுவர கல்யாண காலத்தில் மனிதனுடைய கல்யாணம் செய்யக்கூடாது உத்ஸவாரம்பத்தில் ஐந்தாம் திருநாளில் தீர்த்த தினத்தில் எல்லா மூர்த்திகளுக்கும் தைலாப்யங்கம் செய்யவேண்டும். — காமிகம்.

याग शेषमिदं सर्वं आचार्याय प्रदापयेत् ।

உத்ஸவத்தில யாகசாலையிலுள்ள தோரணம். சுருக், சுருவம் முதலிய யாக உபகரணங்கள் யாவையும் ஆசாரியனிடம் கொடுககவேண்டும்.

आचार्य मनस्तुष्टिः देवसन्तोष कारणम् ।

ஆசாரியனுடைய மனதின் சந்தோஷமே தேவ சந்தோஷத்திற்குக் காரணம். — காமிகம்.

தீக்ஷை :

ஆன்மாக்களுக்கு பாசத்தைக் கெடுத்துச் சிவ தத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவ சத்திக்கிரியையே தீக்ஷை எனப்படும்.

தீக்ஷை என்பது ஹௌத்ரீ என்றும் அஹௌத்ரீ என்றும் முதலில் இரண்டு வகைப்படும். ஹோமத்துடன் கூடியது ஹௌத்திரீ. ஹோமமில்லாதது அஹௌத்ரீ, என வழங்கப்படும். இவ்விரண்டும், ஸமயதீக்ஷை விசேஷதீக்ஷை, நிர்வாணதீக்ஷை என்று மூன்றுவிதம் ஆகும். (தொடரும்)

# “சிறபஞ்சமூலத்தில் திருக்குறள்”

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடியினர்பேசும் நம்தமிழ்மொழிபல்லாயிரம் ஆண்டுகளாகத் தோற்றமுற்று விளங்குவது. அத்தகு உயர் தனிச் செம்மொழியில் எண்ணற்ற நூல்கள் இருப்பினும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை முக்கியமானவை. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் மேற்கணக்கைச் சார்ந்தன.

‘அடி நிமிர்பில்லாச் செய்யுள் தொகுதி அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்’ என்பது பன்னிருபாட்டியற் சூத்திரம். இதற்கிணங்க அறம், பொருள், இன்பம் இவற்றைத்தழுவி அமைந்த நூல் கீழ்க்கணக்காகும் இது ஐம்பதிற்குறைந்தும், ஐந்நூற்றின் மிக்கும்வரும். திருக்குறள் ஐந்நூற்றுக்கும்மிக்குவருவது. இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது முதலியன ஐம்பதிற்குறைந்து வருவன.

நாலடியார் முதல் ஏலாதி ஈறாக அமைந்துள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பதினைந்தாவதாகச் சிறுபஞ்ச மூலம் என்னும் நூல் அமைந்துள்ளது. அந்நூலின் பெயர்க்காரணத்தைக் காண்போம். மருத்துவ நூலிற் காணப்பட்ட கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் ஆகிய ஐந்து மூலங்கள் மக்களுடைய பிணிகளைத் தீர்ப்பதுபோல, இந்நூல் தன்னில் அமைந்த ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கிய ஐந்தைந்து கருத்துக்களால் அறியாமை என்னும் பிணியை அகற்றி நல்லொழுக்க நெறிகளை விளக்கிக் காட்டவல்லது. இதன் ஆசிரியர் காரியாசான்.

“ மல்லிவர்தோள் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினால் — கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான் ”

என்னும் பாயிரச் செய்யுளிலிருந்து நாமறிவது, மாக்காயனார் மாணாக்கராகிய காரியாசான் என்னும் சான்றோர் மக்கள் அறியாமையும், குற்றமும் நீங்கும்படி சிறுபஞ்சமூலம் என்னும் இந்நூல்

இயற்றினர் என்பது. பாயிரச்செய்யுள் உள்பட நூறு செய்யுட்கள் கொண்டது இந்நூல். இவற்றில் இரு செய்யுட்களின் மூலம்மட்டும் சிதைந்து காணப்படுகிறது. கடவுள் வாழ்த்து வருமாறு :-

முழுதுணர்ந்து மூன்றொழிந்து மூவாதான் பாதம்
பழுதின்றி ஆற்றப் பணிந்து — முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா உரைப்பன் சில.

இச் செய்யுளின் விசேடம் என்னவெனில் சிறுபஞ்சமூலம் என்ற இந்நூற் பெயர்க்கேற்ப இதன் ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்து பொருள்கள் அமைந்திருத்தல் வேண்டும். அம்முறைப்படி இக் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலும் முக்குற்றம் ஒழித்தல் மூன்றும், முழுதுணர்தல் ஒன்றும், மூவாமை ஒன்றும் ஆக ஐந்து கருத்துக்கள் இணைந்து வருகிறது.

சிறுபஞ்ச மூலத்தில் தொண்ணூற்றெட்டு செய்யுட்களின் பொருளை நோக்குவோமானல் எல்லாவற்றிலும் உலகப் பொது மறையாம் திருக்குறளின் கருத்துக்கள் பொதிந்து கிடப்பதைக் காணலாம். அவற்றுள் சில பாடல்களின் கருத்துக்களை ஈண்டுக் காண்போம்.

"பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே ஆகும் — அருளுடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக்கு உய்த்து"

பொருளுள்ளவனுக்கு இன்பம் பெருகும். அருளுள்ளவனுக்கு அறம் விளையும். அருளுள்ளவன் பழியையும், தீவினையையும், புறங்கூறுதலையுஞ்செய்யான். இக்கருத்தே திருக்குறளில், "அருளிலார்க்கு அவ்வுலகமில்லை பொருளிலார்க்கு இவ்வுலகமில்லாகி யாங்கு" என்னும் குறட்பாவில் அடங்கியுள்ளது.

"கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டும்
இல்லாதான் எக்கழுத்தஞ் செய்தலும் — இல்லாதான்
ஒல்லாப் பொருளில்லார்க்கு ஈத்தளியான் என்றலும்
நல்லார்கள் கேட்பின் நகை"

கல்லாதான் நுட்பம், காதில்லான் இறுமாப்பு, இல்லாதான் சிறிது பொருளீந்து அருள் உடையான் என்றல் முதலியவை அறிஞர்க்கு நகைப்பினையே விளைவிக்கும்.

"கல்லாதா னொட்பங் கழிய நன் றாயினுங் கொள்ளா ரறிவுடையார்" என்ற குறளின் கருத்தும், "கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தாற் பெற்றதாம் பேதையோர் சூத்திரம் - மற்றதனை

நல்லாரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன் புல்லறிவு காட்டி விடும்'' என்ற நாலடியார் பாடலின் கருத்தும் 'கல்லாதான் காணும் நுட்பம்' என்னும் பொருளை வலியுறுத்துகின்றன.

"உடம்பொழிய வேண்டின் உயர்தவம் ஆற்றிண்டு இடம் பொழிய வேண்டுமேல் ஈகை - மடம்பொழிய - வேண்டின் அறிமடம் வேண்டேல் பிறர்மனை யீண்டின் இயையுந் திரு" இப்பாடலில் புகழ் நிறைய ஈகையும், பிறர்மனை விரும்பாமையும் வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது. "ஈதலிசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு" என்ற குறட் பாவின் கருத்தும் "பகை பாவம் அச்சம் பழியென நான்கும் இகவாவாம் இல்லிறப்பான் கண்" என்ற குறளின் கருத்தும் இதில் பொருந்தியுள்ளன.

"பற்றினன் பற்றற்ருன் நூல் தவசி எப்பொருளும்
முற்றினன் ஆகும் முதல்வன் நூல் — பற்றினல்
பாத்துண்பான் பார்ப்பான் பழியுணர்வான் சான்றவன்
காத்துண்பான் காணுன் பிணி"

பற்றற்ருனற் சொல்லப்பட்ட நூலைப் பற்றினன் தவசியாவான். நூலின்கண் சொன்னபடியே பகுத்துண்பான் பார்ப்பானுவான். பழியை யுணர்வான் சான்ருனவான். நல்லன தெரிந்துண்பவன் நோயறியான். ஈண்டு "பற்றுக பற்றற்ருன் பற்றினை" என்று வள்ளுவர் கூறயது நினைத்தற்குரியது. "அற்றதறிந்து கடைப் பிடித்து மாறல்ல, துய்க்க துவரப் பசித்து" "மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணின் ஊறுபாடில்லை உயிர்க்கு" என்னும் குறள்களின் பொருளுணர்ந்து, கொள்ளத்தகாத உணவை நீக்கிக், கொள்ளத்தக்கவுணவைக் கொள்வோன் நோயற்றுவாழ் வான்." கண்வனப்புக் கண்ணேட்டங் கால்வனப்புச் செல்லாமை, எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக் கேட்டார் நன்றென்றல் கிளர்வேந்தன், தன்னுடு - வாட்டான் நன்றென்றல் வனப்பு "கண்ணுக்கழகு கண்ணேட்டம்" அஃதா வது அன்புடன் பார்த்தல். அருட்பார்வையற்ற கண் வன்கண் எனப்பட்டது. அரசனுக்கு அழகாவது தன் நாட்டிலுள்ள குடிகளை வருத்தான் என்று உலகத்தார் புகழ்வதேயாகும். "கண்ணிற்கணி கலங்கண்ணேட்டம் அஃதின்றேல் புண்ணென் றுணரப்படும்" என்ற குறட் கருத்தும், "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறையென்று வைக்கப்படும்" என்ற குறட்கருத்தும் மேற்கூறிய பொருள்களை வலியுறுத்து கின்றன.

# செய்திகள்

தருமையாதீனத்தில் ;

## மண்டலாபிஷேக நிறைவு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் பதின்மூன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பதினான்காவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பதினைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலயங்களின் மகாகும்பாபிஷேகம் பிரமாதீச ஆண்டு சித்திரைத் திங்கள் 27-ஆம் நாள் (9—5—73) புதன்கிழமை நிகழ்ந்ததை முன்னிட்டு, ஆனித்திங்கள் 11-ஆம் நாள் (25—6—73) திங்கட்கிழமையன்று காலை 9 மணிக்குமேல் ஷை குருமூர்த்த ஆலயங்களின் மண்டலாபிஷேக நிறைவு விழா, விசேட அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. மாலையில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது

காலை, மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். குருமூர்த்த ஆலயத்தில் மாலை 7 மணி அளவில், சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. திரு. வி. சா. குருசாமி தேசிகர்; திரு. வி. சபேசன், திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர் 13, 14, 15, 22 ஆவது குருமகாசந்நிதானங்களின் அருள் வரலாறுகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டும், வழிபட்டும் உய்ந்தனர்.

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

நிகழும் பிரமாதீச ஆண்டு ஆனித்திங்கள் 20 ஆம் நாள் (4—7—73) புதன்கிழமை காலை மணி 9 க்கு, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக

ஆராதனைகளும், இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் பண்ணிசைப் பாராயணத்துடன் திருவுலாவும் சிறப்பாக நடைபெற்றன.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வழிபட்டு மகிழ்ந்தனர்.

மாலை 6 மணி அளவில் கீழ்க்காணுமாறு சொற்பொழிவுகள் நடைபெற்றன. தருமையாதீனப்புலவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "சிவபுராணம்" என்ற தலைப்பிலும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் "திருச்சதகம்" என்ற தலைப்பிலும், வித்துவான் திரு வி சபேசன் "திருக்கோத்தும்பி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

வேளூரில் :

## வசந்தோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பிரமாதீச ஆண்டு சித்திரைத்திங்கள் 25ஆம் நாள் (7—5—73) சோமவாரத்தன்று தொடங்கி, வைகாசித்திங்கள் 3ஆம் நாள் (16—5—73) புதன்கிழமை முடிய உள்ள நாட்களில் வசந்தோத்சவம் சிறப்பாக நடைபெற்றது.

7—5—73 அன்று வசந்தோத்சவ ரக்ஷாபந்தனமும், இரண்டாம் திருநாள் முதல் பத்தாந் திருநாள் முடிய உள்ள நாட்களில் மாலை 6 மணி அளவில், வசந்த மண்டபத்தில் சுவாமி அம்பாள் ஊஞ்சல் உற்சவமும் 16-5-73 அன்று ரக்ஷாவிசர்ஜனமும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு உய்ந்தனர்.

## சம்வத்சராபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில், சௌம்ய ஆண்டு ஆனித்திங்கள் 18ஆம் நாள் (2—7—69), திருவோண நக்ஷத்திரத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதை யாவரும் அறிவர். அந்நாளில் ஆண்டுதோறும் சிறப்பு அபிஷேகம் நிகழ்ந்து வருகிறது.

அம்முறையில் இவ்வாண்டும் ஆனித்திங்கள் 5ஆம் நாள் (19—6—73) செவ்வாய்க்கிழமை திருவோண நக்ஷத்திரத்தன்று சம்வத்சராபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

காலை பத்து மணி அளவில் ஏகாதசருத்ரஜபமும் சுவாமி, அம்பாள், ஆறுமுககுமாரர், அங்காரகன், சண்டிகேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றன. பின்னர், ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானுக்குப் பஞ்சமுகார்ச்சனையும் ஸ்ரீதையல் நாயகிக்கு நவசக்தியர்ச்சனையும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும், ஸ்ரீ ஆறுமுகருக்கும் சண்முகார்ச்சனையும் ஸ்ரீ விநாயகருக்கும் ஸ்ரீ அங்காரகனுக்கும் சகஸ்ர நாமார்ச்சனையும் நடைபெற்றன.

மாலை 7 மணி அளவில், தருமையாதீனத் தேவார பாடசாலை ஆசிரியர், திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்களால் "சடாயுமோக்ஷம்" பற்றி கதாகாலக்ஷேபம் நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர். இரவு 9 மணி அளவில் மண்டப தீபாராதனை நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள்.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 1—6—73 வெள்ளிக்கிழமை திரு. R. சிவஞானம்செட்டியார் B.Sc., அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளால், வேளூர் கிருத்திகைப் பிரசாதம் பெறும் அன்பர்களுள் யானும் ஒருவனைச் சேர்ந்தேன். ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியின் அருளால், நீண்ட நாட்களாக இருந்த என்குறை நீங்கி ஆண்மகவு பெறும் பாக்கியம் பெற்றேன். பிணிகளும் நீங்கப்பெற்றேன் என்று கூறி எல்லோரும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியின் அருளைப்பெற வேண்டும் என்று தலைவர் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்கள். வேளூர்த் தேவாரம், நாமாவளிப் பாராயணம் முதலியன, தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் நிகழ்த்தப் பெற்றன.

29—6—73 அன்று வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா சென்னை, தினமணி பத்திரிகை உதவி ஆசிரியர் திரு. N. P. ஸ்ரீரங்கன் அவர்கள் தலைமையில், சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்கள் தமது தலைமை உரையில், தருமையாதீனம் தெய்வப் பணிகளைச் சிறப்புற ஆற்றி வருகிறது. சந்தனக்குழம்பு பிரசாதம் வழங்கும் விழா அப்பணிகளில் ஒன்றாக சென்னை மக்களுக்குக் கிடைத்த பாக்கியமாக விளங்குகிறது என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, அமுதமொழி அரசு திரு N சங்கரநாராயணன் அவர்கள் 'முருகன்பெருமை' என்ற தலைப்பில் ஞானபண்டிதனாகிய முருகன் நமக்கு ஆணவத்தைப் போக்கி அறிவையும் ஆற்றலையும் கொடுத்து வாழவைப்பான் என்று குறிப்பிட்டார்கள். திரு இராமமூர்த்தி அய்யர், தேவார வகுப்பு மாணவர்களால் வேளூர்த் தேவாரம், நாமாவளிப் பாராயணம் முதலியன நிகழ்த்தப்பட்டன. விழா முடிவில் அன்பர்களுக்கு சந்தனக்குழம்பு விபூதி பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில், மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு, சென்னை கோடம்பாக்கம் புலியூர் ஸ்ரீ பாரத்வாஜேஸ்வரர் திருக்கோயிலில் 24—6—73 ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சார்பில் ஸ்ரீ சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அர்ச்சனைகளும் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டுக்குப் பின்னர் சமயப் பிரசாரக் கூட்டம் திரு C. செல்வ நடராஜ முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. B. C. இலிங்கம், திரு. ந. ரா. முருகவேள், திரு. S வடிவேல் பிள்ளை ஆகியோர் "கூட்டு வழிபாட்டின் நோக்கம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். இப்பழமை வாய்ந்த இக் கோயில் குடமுழுக்கு விழாவைச் சிறப்புடன் நிகழ்த்த விழாக் குழுத் தலைவராக இருந்து பணியாற்றிய திரு. S. வடிவேல் பிள்ளை அவர்களுக்கு நிலைய அன்பர்கள் சார்பில் திரு. P. வடிவேல் பிள்ளை அவர்கள் வெண்பட்டு போர்த்தி பாராட்டுரை வழங்கினார்கள்.

திரு S. வடிவேல் பிள்ளை அவர்கள் தமது நன்றியுரையில், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இக்

குடமுழுக்கு விழாவிற்கு ஊக்கம் கொடுத்து அடியேனை இப்பணியில் ஈடுபடுத்தினர்கள் என்று குறிப்பிட்டார்கள். மேலும் இக்குடமுழுக்கிற்குத் தேவையான அஷ்டபந்தன மருந்துகளையும், ஸ்ரீ சந்தாசாரியர் திருவுருவங்களையும் வழங்கி ஆசி அருளினர்கள். திருப்பணிக் குழுவினர் சார்பில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவடிகளுக்கு நன்றியையும் பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டார்கள். வழிபாட்டில் திரு. R. சண்முகம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## நாயன்மார்கள் குருபூசை விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 3-6-73 அன்று நம்பியாண்டார்நம்பிகள் குருபூசையும், 4—6—73 அன்று நமிநந்தி அடிகள் குருபூசையும், 5—6—73 அன்று சோமாசிமாற நாயனர் குருபூசையும், 24—6—73 அன்று ஏயர்கோன் கலிக்காம நாயனர் குருபூசையும் சிறப்பாக நடைபெற்றன. தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப் பாராயணமும், நிலைய அன்பர்களால் வழிபாடும் நிகழ்த்தப்பட்டன. திரு. ஆங்கீரச வேங்கடேச சர்மா அவர்களால் பெரிய புராண விரிவுரை நிகழ்த்தப்பட்டது. பின்னர் அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

## இரண்டு மரங்கள்

பாரதக் கதையை இரண்டு மரங்களாகக் கொண்டால் கோபமே வடிவான துரியோதனன் பெரிய மரம் திருதராட்டினன் அதன் வேர் கர்ணன் அடிமரம் சகுனி கிளை. துச்சாதனன் பூவும் கனியும்.

மற்றொன்று தருமமே உருவான தருமர் பெரியமரம். இதற்குக்கண்ணபிரானும் வேதமும்வேதியர்களும்வேர்கள் அர்ச்சுனன் அடிமரம் பீமன் கிளை. நகுல சகாதேவர் பூவும் கனியும். இந்த இருமரங்களில் எதுவாழும் எதுவீழும் என்று அன்பர்கள் தாமே உணர்வார்கள்.

— வாரியார் — தினமணி, 2—7—73.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பிரமாதீசஹு ஆடிமீ" 1௨ முதல் 32௨ முடிய )
( 16—7—73 முதல் 16—8—73 முடிய )

பிரமாதிச வருஷம் ஆடி மாதம் முதல் தேதி திங்கள் கிழமை உத்திராட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 20 விநாடி 13-க்கு துலா லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷக ரான ஸ்ரீ சூரியபகவான் கடகராசி பிரவேசம் செய்கிறார்.

மேற்படி பிரவேசகால பலன் உலகம் எங்கிலும் மாதம் மும்மாரி பெய்துகொண்டு தனதான்ய சமிருத்தியையும் ஆரோக்யத்தையும் தரும். பிரஜைகளுக்கு ஆஸ்திகம் விருத்தி யாகி தெய்வபலம் பிரகாசிக்கும். சாதுக்கள் காப்பாற்றப் படுவார்கள்.

குறிப்பு:. மிதுன ராசியில் சனி, கேது சேருவதால் அசர்ம ராஜ்யங்களில் பலவிதமான உத்பாதங்கள் ஏற்படும். தெய்வபலம் உள்ள இடங்கள் காப்பாற்றப்படும். மானுஷாத் புதம் அதிகமாகும்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனைத்தரும். தூரதேச பிரயாணம் உண்டாகும் வெகுகாலமாக பார்க்காத பந்துக் களுடைய சேர்க்கை ஏற்படும். ஜீவனம் ஓங்கும். ஆரோக் யம உண்டு பண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் சுப மான காரியங்கள் நடந்துகொண்டே இருக்கும் ஸ்திரமான ஜீவனம் ஏற்படும். தகப்பனாரின் குடும்பம் ஓங்கும். புதிதான

தொழில் பக்கபலமாக இருந்துகொண்டு இருக்கும் புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும் எல்லாக் காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும தெய்வபலத்தால் தான எல்லாக் காரியங்களும் சுபமாக நடக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்பத்தில் எல்லாக் காரியங்களும் தவக்கத்தோடு நடைபெறும். பழக்கமான இடங்களில் மனவேற்றுமை உண்டாகும. வைத்தியச் செலவு அதிகமாகும். புதிதான பிரபுக்கள் சந்திப்பு ஏற்படும் ஞாயிறு, திங்கள் சுபமாகும.

5. சிமமம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும் ஜீவன ஓங்கும். குடும்பத்தில் பலவித நன்மைகள் ஏற்படும கீர்ததி பத்திரம கிடைக்கும் செவ்வாய் புதன் சுபமாகும்

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். நண்பர்களாலும்புத்திராதியர்களாலும் எதிர்பாராதநன்மைகள் ஏற்படும தீராத வியாதி தீரும் விவகாரம் ஜெயிக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். நஷ்டமான பொருள் வந்து சேரும் உலகில் பலருடைய உதவியால் அசாத்யமெல்லாம் சுலப சாத்தியமாகும். தூரதேச பிரயாணம ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் கொஞ்சம் சிரமமான பலனைத் தரும் பெரு முயற்சியால்தான் எல்லாக் காரியங்களும் சாதிக்க முடியும் மனதிற்குச் சிரமமான சில விஷயங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். எதிர் பாராத சில நன்மைகள் தானுக வந்துசேரும். கடன் தீரும். புதிதான பிரபுக்களுடைய சந்திப்பு ஏற்படும். தொழில் ஓங்கும். பலபேர்களுடைய உதவி இருந்துகொண்டே இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் குடும்பம் ஓங்கும். மேல்பதவிகள் கிடைக்கும். மேலோர் பெரியோர் களாலும், நண்பர்களாலும் மனதிற்கு எப்பொழுதும் சந்தோஷத்தை உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½-சதயம் -பூரட்டாதி-¾

கும்பராசி 9பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். சுபமான சமாசாரங்கள் வந்து சேரும். கிரகசுகம் ஓங்கும். புதிதான தொழில் பழக்கம் ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக்கும் ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

12. மீனம் - பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி

மீனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும், பெரிய காரியங்களில் ஈடுபடுவதால் சில சிரமங்கள் ஏற்படும். வரவு, செலவு சமமாகும். எந்தக் காரியத்தையும் நினைத்தபடி நடத்த முடியாமல் தடங்கல்கள் இருந்துகொண்டு இருக்கும். புதிதான தொழில் பழக்கம் ஏற்படும் எல்லாவற்றையும் தெய்வபலம் முன்னின்று காக்கும்.செவ்வாய், புதன் சுபமாகும்.

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம் பதிப்பகம்"

# புத்தக விலைப்பட்டியல்

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கப் பணிபல புரிந்து வரும் தருமையாதீனம் இந்நாள்வரை தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் பல்வேறு துறைகளைச்சேர்ந்த 644 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வரிய நூல்களை அன்பர்கள் பலரும் பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர்.

தருமையாதீன வெளியீடுகளில் தற்போது சில நூல்களே கைவசம் உள்ளன. அவற்றிற்குரிய விலை விபரம் இவ்விலைப் பட்டியலில் குறிக்கப்பெற்றுள்ளன.

சமயம், சாத்திரம், திருமுறை, இலக்கியம், ஆகமம் போன்ற பல்வேறு துறையைச் சேர்ந்த இவ்வரிய நூல்களை மீண்டும் மீண்டும் பதிப்பித்து வழங்கவும், புதிய நூல்கள் பலவற்றைக் குறைந்த விலையில் வெளியிட்டு உதவவும் திருவுளங்கொண்ட தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் **"ஞானசம்பந்தம் பதிப்பகம்"** என்ற அறக்கட்டளையை நிறுவியருளியுள்ளார்கள்.

பட்டியலில் கண்ட நூல்களின் விற்பனைத்தொகை அனைத்தும் "ஞானசம்பந்தம் பதிப்பக"த்தையேசாரும். இத்தொகை பல்வேறுதுறைகளில் உள்ள நூல்களைப் பதிப்பித்து வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

ரூபாய் ஐம்பதுக்கு மேற்பட்ட மதிப்புடைய நூல்களை ஓரே நேரத்தில் வாங்குபவர்களுக்கு 15% கழிவும், புத்தக விற்பனையாளர்களுக்கு 20% கழிவும் வழங்கப்படும். வேண்டிய நூல்களுக்கு உரிய தொகையைப் பணவிடை (M. O.) உண்டியல் (draft) மூலம் அனுப்பி நூல்களைப் பெறலாம். V. P. P. வழி நூல்கள் அனுப்ப இயலாது. தபால் செலவுகள் தனி.

இவ்வரிய வாய்ப்பினை அன்பர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுர ஆதீனம் – மாயூரம் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்,

| | | ரூ. பை. |
|---|---|---|
| | **திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்:** | |
| 1 | முதல் திருமுறை | 3 50 |
| 2 | இரண்டாம் திருமுறை | 5—00 |
| 3 | மூன்றும் திருமுறை | 5 75 |
| | **திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்:** | |
| 4 | நான்காம் திருமுறை | 8—00 |
| 5 | ஐந்தாம் திருமுறை | 8—00 |
| 6 | ஆறும் திருமுறை | 8—00 |
| | **சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்;** | |
| 7 | ஏழாம் திருமுறை | 8—00 |
| 8 | மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய எட்டாம்திருமுறை திருவாசகம் - திருக்கோவையார் | 9—00 |
| 9 | ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா - திருப்பல்லாண்டு | 5—50 |
| | **சாத்திர தோத்திர நூல்கள்:** | |
| 10 | அகத்தியர் தேவாரத் திரட்டு | 0—75 |
| 11 | திருமுறை அருச்சனை | 0—25 |
| 12 | தமிழ் அருச்சனை முறை | 0—50 |
| 13 | மெய்கண்ட சாத்திரம் | 3 00 |
| 14 | சித்தாந்தத் தெளிவியல் | 2—75 |
| 15 | மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டு மலர் | 1—00 |
| 16 | சிவஞானபோதம் (உரை நடையுடன்) | 0—25 |
| 17 | சிவஞான சித்தியார் சுபக்கம் (உரை நடையுடன்) | 0 75 |
| 18 | சிவப்பிரகாசம் (உரை நடையுடன்) | 0—25 |
| 19 | சித்தாந்த நூல்கள் 6 (உரை நடையுடன்) | 0—50 |
| 20 | திருவுந்தியாரும் இருபா இருபஃதும் (உரை நடையுடன்) | 0—25 |
| 21 | உண்மை விளக்கம் (உரை நடையுடன்) | 0—25 |
| 22 | சங்கற்ப நிராகரணம் (உரை நடையுடன்) | 0—50 |
| 23 | சித்தாந்த அட்டகம் | 0—50 |
| 24 | சைவசித்தாந்த முதற்படி நூல்கள் | 0—25 |
| 25 | சித்தாந்த சைவ வினாவிடை | 1—00 |
| 26 | சிவபோகசாரம் (உரை நடையுடன்) | 2—25 |
| 27 | ஞானவரண விளக்கமும் மாபாடியமும் | 10—00 |
| 28 | குருஞானசம்பந்தர் அட்டகம் | 1—00 |
| 29 | திருவருட்பாத் திரட்டு | 1—00 |

| | | ரூ. பை. |
|---|---|---|
| 30 | செந்தமிழ்ப் பூம்பொழில் (2 ஆம் தொகுதி) | 1—75 |
| 31 | ,, ,, (3 ஆம் தொகுதி) | 1—00 |
| 32 | ,, ,, (4 ஆம் தொகுதி) | 2—75 |
| 33 | கந்தபுராணச் சுருக்கம் | 2—00 |
| 34 | கந்தபுராணத் திரட்டு | 2—00 |
| 35 | மண்சுமந்த திருவிளையாடல் | 0—30 |
| 36 | தாயுமான சுவாமிகள் பாடல் | 2—00 |
| 37 | திருநால் ஐந்து | 0—50 |
| 38 | சந்தானசாரியர் புராணம் (குறிப்புரை உரை நடையுடன்) | 0—50 |
| 39 | திருத்தொண்டர் திருவந்தாதி | 0—50 |
| 40 | ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை | 0—25 |
| 41 | ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | 0—25 |
| 42 | கோயில் நான்மணிமாலை | 0—25 |
| 43 | திருக்கழுமல மும்மணிக்கோவை | 0—25 |
| 44 | திருக்கயிலாய ஞான உலா | 0—30 |
| 45 | கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி | 0—25 |
| 46 | பிராசாத நான்மணிகள் | 0—50 |
| 47 | சிவக்ஷேத்திர சிவஞானக் கலிவெண்பா | 0—25 |
| 48 | காசிக்கலம்பகம் | 0—25 |
| 49 | திருக்குறள்-அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) | 1—50 |
| 50 | சச்சபுடவெண்பா (குறிப்புரையுடன்) | 0—50 |
| 51 | தண்டலையார் சதகம் | 0—50 |
| 52 | கிளிவிடு தூது | 0—25 |
| 53 | பொன் வண்ணத் தந்தாதி | 0—25 |
| 54 | தென் கயிலை வடகயிலைத் திருப்பதிகங்கள் | 0—50 |
| 55 | திருவருட்டுறைப் புராணம் | 1—50 |
| 56 | கந்தக்கடவுள் வாழ்த்தும் வரலாறும் | 0—25 |
| 57 | திருவாலவாய் தோத்தரத் திரட்டு | 0—25 |
| 58 | புட்பவிதி | 0—25 |
| 59 | குருவழிபாடு | 1—00 |
| 60 | முத்துக்குமாரசுவாமி அந்தாதி | 0—25 |
| 61 | சைவாநுட்டான அகவல் - சிவபூசை அகவல் | 0—50 |
| 62 | சிவபூசா விதி | 0—50 |
| 63 | சைவாநுட்டான விதி | 0—25 |
| 64 | துர்க்கா சப்தசதி விளக்கம் | 1—00 |
| 65 | நித்திய பூஜா லக்ஷண சங்கிரகம் | 1—50 |

| | | ரூ. பை. |
|---|---|---|
| 66 | திருக்கயிலாய யாத்திரை | 5—00 |
| 67 | அமரநாதம் | 3—00 |
| 63 | பசுபதிநாதம் | 3—00 |
| 69 | ஜோதிர்லிங்கத் தலங்கள் | 1—50 |
| 70 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் கனகாபிஷேகவிழாமலர் | 5—00 |
| 71 | புள்ளிருக்கு வேளூர் மகாகும்பாபிஷேக மலர் | 14—00 |
| 72 | திருவையாறு மகாகும்பாபிஷேக மலர் | 5—00 |
| 73 | ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர் | 1—00 |
| 74 | திருவாரூர் ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூசை விழாமலர் சைவசித்தாந்தம் வினாவிடை | 2—00 |
| 75 | பரமாணுப் புராணம் | 1—25 |
| 76 | Sri Gurugnanasambandha of Dharmapuram | 1—00 |
| 77 | The Development of Saivism in South India | 2—00 |
| 78 | Studies in Saiva Siddhanda ( Part I ) | 1—75 |
| 79 | Saiva - Siddhanda | 1—00 |
| 80 | திருபுவனம் மகாகும்பாபிஷேக மலர் | 3—00 |
| 81 | அஷ்டலக்ஷ்மி (தியானசுலோகங்களுடன்) | 1—00 |
| 82 | சேக்கிழார் நாயனார் புராணம் | 0—25 |
| 83 | பிரம சூத்திரம் | 1—25 |
| 84 | பிரமாதீச வருஷப் பஞ்சாங்கம் | 0—75 |
| 85 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவு மலர் | 4—50 |
| 86 | நால்வர் நான்மணி மாலை | 0—50 |

அரிய வாய்ப்பு :— மூவர் அருளிய முதல் ஏழு தேவாரத் திருமுறைகளை (விலை மதிப்பு ரூ. 46—25). ஒருசேர வாங்குவோர்க்கு ரூ. 25—00க்குக் குறைந்த விலையில் தரப்படும். அஞ்சல் செலவு தனி. இத்தொகுதிக்குக் கழிவு இல்லை. குறைந்த தொகுதிகளே கையிருப்பில் உள்ளன. வாய்ப்புக்கு முந்துங்கள்.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

மிகவும் விசேஷமான ஸ்தலம். நன்றி. நன்றாக நடத்தப்படுகின்றது.

(Sd.) A. Ramaswamy
23 - 6—73 P. S. to Governor of Madras.